# முத்துப்பேட்டை

## ஷெய்கு தாவூத் காமில் ஒலி

(என்னும்)

# நபி தாவூத் (அலை)

ஆக்கம்:

**மு.அ. ஹைதர் அலீ யகீனுல்லாஷா B.A.,**

கலிஃபத்துல் காதிரி ஷத்தாரி கூஷிஸ்தி சர்கலிஃபா ரிஃபாயி

**ஸையிதா அத்தீன் கதீஜா D.C.S.E.,காதிரி**

**ஸையிதா ஸையத் பீவி B.Com.,காதிரி**

ஆங்கிலம்:

**அலீ அபுதாஹிர் B.E.,**

கலிஃபத்துல் காதிரி

**மும்தாஜ் பதிப்பகம்**

*39, முஸ்லிம் கருமாரத் தெரு*

*நெல்லிக்குப்பம் – 607 105*

*தமிழ்நாடு – தென் இந்தியா*

*தொ.பே.04142 – 656520 அ.பே: 98947 46014*

www.netsufi.com

நூல் விவரம்

| | |
|---|---|
| பெயர் | : **முத்துப்பேட்டை ஷெய்குதாவூத்காமில்ஒலி** (**என்னும்**) ***நபி தாவூத் (அலை)*** |
| ஆசிரியர் | : **மு.அ. ஹைதர்அலீ யகீனுல்லாஷா** B.A., |
| பக்கம் | : 56 |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கு |

**அச்சகம்:**

*யுனைடெட் பைன்ட் கிராஃபிக்ஸ்*
*189, ராயப்பேட்டை நெடுஞ்சாலை,*
*மைலாப்பூர்,*
*சென்னை - 600 004.*

*சமர்ப்பணம்*

*சர்தாருல் அன்பியா ஷஃபியல் முத்னிபின்*
*ஹபீபு ரப்பில் ஆலமீன்*
*அஹமது முஜ்தபா முகம்மது முஸ்தபா(ஸல்)*

*மகபூப் சுபஹானி மஃசூக் ரஹ்மானி*
*கௌதுல் அஃலம்*
*முகியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரலி)*

*குத்புஜ்ஜமான் குத்புல்அக்தாப் ஃபர்துல்அஃபாப்*

*சையிதினா ஷாகுல்ஹமீத் காதிர்ஒலி*

*பாதுஷா நாயகம்*

*ஆகியோரின்*
*அதி உன்னத ரூஹுக்கு*
*சமர்ப்பணம்*

A.. *முகம்மதுஇலியாஸ் காதிரி.* *எம்.ஏ. ஹைதர் அலீ* **B.A.**
A . *நூர்ஜஹான்பேகம் காதிரி.* *கலிஃபத்துல் காதிரி ரிஃபாயி*
*ஆசிரியை முகம்மத் பீவி காதிரி.*
**Dr.***ஆயிஷா பீவி.* **B.Sc., M.B.B.S.,** *காதிரி.*
*நெல்லிக்குப்பம் - 607 105*

## தரிசனம்

700 ஆண்டுகளுக்கு முன் திரு.கருப்பையா கோனாரின் கனவில் தன்னை அறிமுகப்படுத்தி கொண்ட முத்துப்பேட்டை ஷெய்கு தாவூது காமில் ஒலியுல்லாஹ் அவர்கள்,

நடப்பு ஆண்டு முத்துப்பேட்டை சந்தனக்கூடு இரவு அதிகாலை (05.05.2009 ஹிஜ்ரி 1430 ஜமாத்துல் அவ்வல் பிறை 10 அன்று) என் கனவில் தோன்றி “நான் விவிலியமும் திருக்குர்ஆனும் புகழும் நபி தாவூது (அலை) தான்! இதனை உலகுக்கு வெளிப்படுத்து” என்று கூறிப் போந்தார்கள்.

எம்.ஏ. ஹைதர் அலீ யகீனுல்லாஷா
கலிஃபத்துல் காதிரி சத்தாரி க்ஷிஸ்தி
சர்கலிபா ரிஃபாயி
நெல்லிக்குப்பம்.

## வேதநாயகர்

வேத நாயகரை விவிலிய ஜபூர்வேதம்
விளைநில மாமதியை
நாதமும் கீதமும் பொழிந்து நாயனை
நாடிடும் கவிஞரை
காதலொடு பத்தஷாய் கருவில் ஈசாவை
கவினுரு முகம்மதை
பூதலம் மகிழப் பொருந்திய தாதையை
பொங்கு மாங்கடலாய்
ஆதியில் நபியாய் அவதரித் தவரை
அற்புதர் தாவூது ஒலியை
பாதம் படிந்து பரவினன் முத்தர்
பாட்டையாம் முத்துப்பேட்டையில்
தீதறு தாத்து திருப்பால் கடல்அடி
தேடிய முத்தென அடியேன்
ஓதிடும் காவிய வரலாற்று உண்மையை
ஒப்புக இறையே உவந்து

# முத்து குளியல்

முன்னாள் தஞ்சை இந்நாள் திருவாரூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை என்ற நற்பதியில் அமைந்திலங்குகிறது ஹகீமுல் ஹுகமா ஷெய்கு தாவூது காமில் ஒலியுல்லா அவர்களின் மஜார் ஷரீஃப்.

“தஞ்சைக்கு நெல்லழகு, திருவாரூர் தேரழகு, நாகூரார் கொடியழகு, சேக்காதியார் சந்தனக் கூடழகு” என்று இப்பகுதியில் சொல்லப்படும் கவிதை சேக்காதியார் என்று தென்னகம் போற்றும் ஷெய்கு தாவூத் ஒலி நாதரைப் புகழ்கிறது.

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இன்று தர்கா ஷரீஃப் அரண்மனை போல் விளங்கும் இடத்தில் இருந்த நஞ்சை நிலத்தில் கருப்பைய கோனார் என்ற விவசாயி ஏர்கொண்டு உழுது கொண்டிருந்தார்.

சேற்றிலிருந்து பீரிட்டடித்த இரத்தத்தை கண்டு பயந்த அவர் மயங்கிவிழுந்தார். அப்போது கண்ட கனவில் ஒரு பெரியார் தோன்றி “என் பெயர் ஷெய்கு தாவூத். நான் இங்கு அடக்கமாகியுள்ளேன். அருகிலுள்ள நாச்சிகுளத்திலுள்ள முஸ்லிம்களிடம் அறிவித்து எனக்கு இங்கு நினைவிடம் எழுப்பச் சொல்” என்று கூறி மறைந்ததாக வரலாறு.

இறைநேசச் செல்வரைப் பற்றி இங்கு வேறு எந்த விதமான குறிப்பும் தடயமும் கிடையாது. எழுப்பப்பட்ட கபர் ஷரீஃபை நாடி வந்து நிற்கும் நபர்களுக்கு மதபேதமின்றி கனவிலும் நனவிலும் நடக்கும் அற்புதங்கள், உடல்பிணி, மனப்பிணி நீங்குதல், குடும்ப பிரச்னைகள் சீரடைதல் போன்ற நிகழ்வுகளோ எண்ணற்றவை.

எனது ஷெய்குனா முகம்மது உசேன் சாஹிப் ஆரிஃபுபில்லா அவர்களின் முராது ஒன்று இங்கு நிறைவேறியதாலும் அவர்களின் துணைவியார் எமது தாயார் பாத்திமா பீவி அவர்களின் மனக்கவலை நீங்கியதாலும், மேலும் எனது தம்பி லியாகத் அலீ என்பவர் இங்கிருந்து ஞானம் பெற்று தெளிந்த ஞானியாய் விளங்கினார் என்பதாலும், எனக்கு ஒலிநாயகத்தின் தர்பாரில் ஈடுபாடு உண்டு.

அன்பர்கள் சிலரிடமிருந்து எஜமான் ஷெய்கு தாவூது ஒலியைப்பற்றி வரலாறு எழுதப்படவேண்டுமென்ற கோரிக்கை வந்தது. முன்னுள்ள நூல்பல என்றாலும் எல்லாவற்றிலும் கராமத் என்னும் அற்புதங்களைப் பற்றிய தகவல்களும் முனாஜாத் என்னும் மன்றாட்டுகளும் மட்டுமே காணப்படுகின்றன. வரலாற்றை எப்படி எழுதுவது என்று யோசித்தேன்.

தர்காவை சுற்றி வாழும் அன்பர்கள் சிலர், இவர்கள் நபி தாவூத் (அலை) அவர்களே ஆவார்கள் என்று நீண்ட காலமாகவே ஒரு செவிவழி செய்தி இருப்பதாக கூறினார்கள்.

நான் வியப்படைந்தேன். இதே போன்ற விஷயங்கள் ஆங்காங்கே உள்ளன. நபி ஈசா (அலை) அவர்களுக்கு காஷ்மீரில் அடக்கவிடம் உள்ளது என்று கூறுகிறார்கள். முதல் மனிதர் ஆதம்(அலை) புதைக்கப்பட்ட இடத்தில் தான் கஅபத்துல்லா கட்டப்பட்டதாக ஷெய்குல் அக்பர் முகியித்தீன் இபுனுல் அரபி கூறியிருக்கிறார்கள்.

எனவே நான் விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டையும், திருக்குர்ஆனில் நபி தாவூத் (அலை) பற்றிய குறிப்புகளையும் துழாவினேன். பன்னூல் ஆசிரியர் எம்.ஆர்.எம்.அப்துர் ரஹீம் அவர்களின் இஸ்லாமியக் கலை களஞ்சியத்தையும், நபிமார்கள் வரலாறு என்ற நூலையும் நாடினேன்.

நபிமார்கள் வரலாறு என்ற நூலில் எம்.ஆர்.எம்., நபி தாவூத்(அலை) அவர்களின் கபர் ஷரீஃப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்கள்:-

நபி தாவூத் (அலை) அவர்களின் அடக்கவிடம் பெத்லஹமில் இருப்பதாக கி.பி. 14.ம் நூற்றாண்டு வரை கருதப்பட்டு வந்தது. பைத்துல் முகத்தஸின் தென்மேற்கில் ஒரு குன்றில் உள்ள ஒரு அடக்கவிடம் தாவூத் (அலை) அவர்களின் அடக்கவிடம் என்றும் கருதப்படுகிறது - (நபிமார்கள் வரலாறு பாகம்-2 பக்கம் 448).

ஆகவே நபி தாவூத் (அலை) அவர்களுக்கு ஜெருசலத்திலேயே இரண்டு மஜார் ஷரீஃபுகள் உள்ளன. பன்னூல் ஆசிரியர் அவர்கள் அதே நூலில் நபி சுலைமான் (அலை) அவர்கள் அடக்கவிடம் பற்றி கூறியிருப்பதும் கவனிக்க தக்கது.

நபி சுலைமான் (அலை) பைத்துல் முகத்தஸ்ஸில் குப்பத்துஸ்ஸஹ்ரா என்ற இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள் என்று கருதப்படுகிறது. சிலர் அவர்களின் அடக்கவிடம் திபரீயாஸ் கடல் அருகில் இருப்பதாகவும் கூறுகின்றனர். இது தபரீ அறிவிக்கும் நபி மொழி. மேலும் சுலைமான் நபி அவர்களின் அடக்கவிடம் அந்தமான் தீவில் இருப்பதாவும் கூறப்படுகிறது.

இப்படி நபி தாவூத் (அலை) பற்றியும் நபி சுலைமான் (அலை) பற்றியும் வரலாற்றுப் புகழ் பெற்ற இன்னும் பலரின் அடக்கவிடங்கள் பற்றியும் வேறுப்பட்ட பல தவகல்கள் உள்ளன. முத்துப்பேட்டையில் கிடைக்கும் சில கிரந்தங்களில் ஒலி நாயகம் பனி இஸ்ராயீலரை சேர்ந்தவர்கள் என்றும் நபி மூஸா(அலை) அவர்களின் காலத்தவர் என்றும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளது. ஆனால் நபி தாவூத் (அலை) என்று திட்டவட்டமாக எப்படி கூறுவது என்று கவலைப்பட்டேன்.

ஆனால் நபி தாவூத் (அலை) இங்கு அடங்கியுள்ளனர் என்று தொடர்ந்து என் கனவில் பலமுறை அறிவிக்கப்படுகிறது. முத்துப்பேட்டையை பொறுத்தவரை இந்த தர்காவில் காண்பதெல்லாம் கனவுகள்தான். 700 ஆண்டுகளுக்கு முன் கருப்பையா கோனாரின் கனவில் தன்னை அறிமுகப்படுத்தி கொண்ட எஜமான் தாவூது ஒலி நாயகம் “நான் விவிலியமும் திருக்குர்ஆனும் புகழும் தாவூத் நபிதான்” என்றும். இவ்விஷயத்தை பிரபலப்படுத்து என்றும் என் கனவில் சொல்கிறார்கள்.

எனவே எனக்கு வந்த கனவுகளைப் பற்றி நான் அதிசயப்படவில்லை. துணிந்து எழுத தொடங்கிய பிறகு விவிலிய நூலில் தாவீதின் சங்கீதம் என்ற பகுதியிலும், நபிமார்கள் வரலாறு நூலிலும் காணப்படும் தகவல்கள் தான் என்னை மேலும் அதிசயப்படவைத்தன.

“உழுபவர்கள் என்முதுகின் மேல் உழுது வயலை பதப்படுத்தினார்கள்” (சங்கீதம் 124:3) என்ற விவிலிய பாடல் முக்கியமானது. கருப்பையா கோனார் ஷெய்கு தாவூத் ஒலியின் அடக்கவிடத்தில் ஏர் உழுதார் இரத்தம் பீரிட்டடித்தது என்ற தகவலோடு இது ஒத்துப்போகிறது. நபி தாவூது (அலை) அவர்களைப் பற்றிய பைபிள் சார்பு இலக்கிய குறிப்புகள் பல விஷயங்களை கூறுகின்றன.

மேலும் முத்துப்பேட்டை கடற்கரையை ஒட்டி காணப்படும் அலையாத்தி காடுகளும், நீராடும் குட்டித்தீவுகள் மொத்தி தீவு, குட்டினி காடு தீவு, நடுகடை தீவு, முனியன் தீவு, முதலை தீவு, படிமனை தீவு, கோலன் தீவு, சுடுபாட்டு தீவு, அடப்பு தீவு, கோலன் தீவு, நெடுந்தீவு ஆகியவை அமைந்துள்ளன. இந்த இயற்கை திட்டு காட்சி ஜெருசலம் அருகில் உள்ள கடற்கரையிலும் அமைந்துள்ளதாக கூறப்படுகிறது.

தாவூது நபி அவர்களின் அடக்கத்தலத்தின் தலைமாட்டில் நதியொன்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓடும். கால்மாட்டில் கடல் அலை எழுப்பி பாடும் -என்ற இந்த இரு விஷயங்கள் முத்துப்பேட்டையில் ஷெய்கு தாவூது ஒலி நாயகத்தின் மஜார் ஷரீஃபில் பொருத்தமாய் அமைந்துள்ளன.

ஒலி நாயகத்தை இங்கு ஹகீமுல் ஹுகமா மருத்துவ சிகாமணிகளிடை மாணிக்கம் என்று குறிப்பிடுகிறார்கள். நபி தாவூத்(அலை) அவர்களைப்பற்றிய வரலாற்று குறிப்புகளோ நபி அவர்களும் மருத்துவ மாமேதை என்று கூறுகின்றன.

அவர்களின் அமைச்சரவையில் யூனானி மருத்துவராகிய அறிஞர் லுக்மானுல் ஹக்கீம் அமைச்சராயிருந்ததாகவும் அவரும் நபி அவர்களும் சிறந்த யூனானி வைத்தியர்களென்றும் கலந்தாலோசிக்கும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

நபி அவர்கள் ஜெருசலத்திலிருந்து இந்தியாவுக்கு வந்த காரணம் அவர்களின் அந்திமகாலத்தில் மரணத் தூதர் இஸ்ராயீலை சந்தித்த சம்பவமாகும் என்று தெரியவருகிறது.

வாழ்நாள் முடியும் முன், ஆதிமனிதர் ஆதம் (அலை) பூமியில் தோன்றிய இடத்தை ஈழத்தில் தரிசிக்க வேண்டும், ஆதம் அவர்களின் மைந்தர்கள் ஆபில் காபில் ஷீது ஆகிய அடக்கத்தலத்தை இராமேஸ்வரத்தில் காணவேண்டும், சோழ மண்டல கரையில் நபி நூஹ் (அலை) கப்பல் கட்டிய சீர்காழி என்ற தலத்துக்கு செல்ல வேண்டும் என்ற நோக்கம் இஸ்ராயீலின் சந்திப்புக்குப்பின் நபி அவர்களின் இதயத்தில் எழுகிறது.

மேலும் தன் உடல் படைக்கப்பட்ட மண்ணுக்கு உரிய நிலம் முத்துப்பேட்டையில் இருக்கிறது என்பதை உணர்ந்து, எங்கிருந்து மண் எடுக்கப்பட்டதோ அங்கே மனிதனின் சடலம் சென்று சேர்ந்துவிடும் - (இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹதீஸ்) என்ற நிலை அறிந்து தன் உடலை முத்துப்பேட்டைக்கு கொண்டு போய் சேர்க்க முடிவெடுக்கிறார்கள்.

மைந்தர் நபி சுலைமான் (அலை) காற்றுக்கு கட்டளையிட காற்றின் உதவியால் ஈழத்தையும் பரந்த பாரதத்தையும் சுற்றிவிட்டு முத்துப்பேட்டையில் தங்கிய நபி தாவூத் (அலை) அவர்களை தசரதராமன் அநுமனுடன் வந்து தரிசித்த தகவல் வால்மீகி இராமாயணத்திலுள்ளது.

நபி அவர்களை பின் தொடர்ந்து அவர்களின் உத்தம மனைவி பத்தாஷாயும் முத்துப்பேட்டை வந்து சேருகிறார். பத்தாஷாய் பெற்ற மகன்தான் நபி சுலைமான் (அலை) அவர்களாவார்கள். நபி சுலைமான் (அலை) சந்ததியில்தான் நபி ஈசா(அலை) பிறந்தார்கள். இது விவிலியம் கூறும் வரலாற்று உண்மை.

ஆனால் முகம்மது நபி (ஸல்) அவர்களும் நபி தாவூத் (அலை) மற்றும் சுலைமான் (அலை) சந்ததியினர் தான் என்பது ஆய்வுகளிலிருந்து கிடைக்கும் அற்புதமான செய்தியாகும்.

நபி ஈசா அவர்கள் காதலியரான பக்தை மகதலேன் மரியாவின் மகள் சாரா என்ற பெண்மணியின் சந்ததியில் நபி முகம்மத் (ஸல்) அவர்களின் தாயார் மாதரசி ஆமினா தோன்றியிருக்கிறார்கள் என்ற தகவல் நபி தாவூத் (அலை) அவர்களின் சிறப்பை உயர்த்துகிறது.

பட்சி ஜாலங்களுடனும், மிருக இனங்களோடும் பேசும் ஆற்றல் பெற்ற நபி தாவூத் அவர்கள் இரும்பை கைகளால் வளைத்து வனைந்திட ஆற்றல் பெற்றவர்களாகவும் இருந்தார்கள். இரும்பை வளைத்து இராணுவ உடை தாயரித்து சுயமாக சம்பாதித்து தன்வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் என்று பைபிள் கூறுகிறது.

எல்லாவிதமான சிறப்புகளுடனும் இந்தியாவுக்கு வந்து முத்துப்பேட்டையில் தங்கி பத்தாண்டு காலம் வாழ்ந்து மறைந்து அங்கேயே அடக்கமாகி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வெளிப்பட்டு,

தமது குலவழிப் பேரர் நபி முகம்மத் (ஸல்) அவர்களின் மார்க்கவழி இறைநேசச் செல்வராக ஒளி சிந்தி கனவிலும் நனவிலும் தோன்றி அற்புதம் புரிந்து, அணுகிவரும் மாந்தருக்கெல்லாம் உடல் பிணியும் மனப்பிணியும் நீக்கி, வாழ்க்கையின் துன்பங்களெல்லாம் போக்கி, முக்தி நிலை அருளும் பேரானந்த பெருமானாக ஷெய்கு தாவூத் காமில் ஒலியுல்லா என்ற பெயருடன் இலங்குகிறார்கள் நபி தாவூத் (அலை) அவர்கள்.

நபி தாவூத் (அலை) அவர்களின் வாழ்க்கையில் சில குறிப்பிட்ட சம்பவங்களை விளக்கி, அவர்கள் இந்திய மண்ணுக்கு தங்கள் அந்திம காலத்தில் வந்ததற்கான காரணங்களையும் கவிதைகளில் கூறி முடிக்கும் இந்நூலின் முன்னுரையை இத்துடன் நிறைவுசெய்து கொள்கிறேன்.

இறைவா எனது முயற்சிக்கான நற்கூலியாக என் இதயத்தில் நான் ஏந்தியிருக்கும் வேண்டுதல்களை நிறைவேற்றுவாயாக.

எஜமானே ஹக்கீமுல் ஹுகமா ஆகிய நாயகமே எனது முரீது மகளார் நூர்ஜகான் பேகம் உடல்நிலை சீரடைந்து நல் ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் பெற அருள்புரியுங்கள்.

எஜமானே காமில் ஒலியுல்லாவாகி பெயர் விளங்கும் தாவூத் நபியே எனது முரீது மகளாரும் இந்த நூலின் உதவி ஆசிரியருமான அத்தீன் கதிஜாவின் மனக்கவலைகளை நீக்கி அருள்புரியுங்கள்.

இந்நூலை படிப்போர் சிந்திப்போர் அனைவரின் மீதும் கிருபை செய்யுங்கள். எனது சிரம் மீது தங்கள் பாத கமலங்களை அருள் புரியுங்கள்.

பணிவுள்ள அடியான்
எம். ஏ. ஹைதர் அலீ யகீனுல்லாஷா

# அஸ்மாவுல் தாவூதியா

அல்லாஹுெம்ம ஸல்லி அலா ஸய்யிதினா வ நபிய்யினா வ மவ்லானா முஹம்மதின் திப்பில் குலூபி வதவாயிஹா வ ஆஃபியத்தில் அப்தானி வ ஷி ஃபாயிஹா வ நூரில் அப்ஸாரி வ ளியாயிஹா வஅலா ஆலிஹீ வ ஸஹ்பிஹீ வஸல்லிம்.

ஸல்லல்லாஹுெ அலா ஸையிதினா முஹம்மதின் வஅலா ஆலி ஸையதினா முகம்மதின் வபாரிக் வசல்லிம் அலை

அஸ்ஸலாமு அலைக்க யா நபிய்யல் முகத்தஸ்
அஸ்ஸலாமு அலைக்க யா கமருன் பிர்தவ்ஸ்
அஸ்ஸலாமு அலைக்க யா ரசூலுன் ஜபூர்
அஸ்ஸலாமு அலைக்க யா ஹைரூன் கஃபூர்
அஸ்ஸலாமு அலைக்க யா ஹெய்குன் ஜமீல்
அஸ்ஸலாமு அலைக்க யா வலீய்யுன் ஜலீல்
அஸ்ஸலாமு அலைக்க யா சிர்ருள் இன்ஜீல்
அஸ்ஸலாமு அலைக்க யா ஹபீபுன் ஜிப்ரீல்
அஸ்ஸலாமு அலைக்க யா ஹகீமுல் ஹுகமா
அஸ்ஸலாமு அலைக்க யா கலீலுல் லுக்மான்
அஸ்ஸலாமு அலைக்க யா நூருல் இர்ஃபான்
அஸ்ஸலாமு அலைக்க யா தீனுல் ஃபுர்கான்
அஸ்ஸலாமு அலைக்க யா ஜத்துல் நபிய்யைன்
அஸ்ஸலாமு அலைக்க யா தரீக்குல் ஹரமைன்
அஸ்ஸலாமு அலைக்க யா நபி தாவூத் அலைஹிஸ்ஸலாம்
முலக்கபி ஷெய்கு தாவூத் ரலியல்லாஹு அன்ஹு

அல்லாஹும்ம அப்தாலனா அப்வாபல்ஹைரி அப்வாபல் பரகத்தி அப்வாபல் ஆஃபியத்தி அப்வாபல் ஸலாமத்தி அப்வாபல் நிஃமத்தி அப்வாபல் கூவத்தி அப்வாபல் குல்லுஹாஜத்தி பிஹக் லாயிலாஹ இல்லல்லாஹ் ஆதம் ஷஃபியுல்லா வபிஹக் லாயிலாஹ இல்லல்லாஹ் இபுறாகிம் கலீலுல்லா வபிஹக்லாயிலாஹ இல்லல்லாஹ் மூஸா கலாமுல்லா வபிஹக் லாயிலாஹ இல்லல்லாஹ் தாவூத் கலிஃபத்துல்லா வபிஹக் லாயிலாஹ இல்லல்லாஹ் ஈசா ரூஹல்லா வபி ஹக்லாயிலாஹ இல்லல்லாஹ் முகம்மதுன் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம். சுபஹான ரப்பிக்க ரப்பில் இஸ்ஸத்தி அம்மாயஸிபுன் வஸலாமுன் அலல் முர்ஸலீன்.

# இறைநேசராய் இலங்கும் இறைதூதர்

ஆண்டெழு நூறுமுன் முத்துப்பேட்டை- இன்று
அமைந்த இடத்திலோர் நஞ்சை நிலம்
வேண்டி விதை நெல்லை தெளித்திடவே - கோனார்
விரைந்து ஏரோட்டிப் போகின்றார்

ஓட்டிய களிமண் சுவட்டினிலே - அந்த
உழவர் நடக்கின்றார் சேற்றினிலே
ஊற்றென பீரிட்டு பொங்குதம்மா - வயலில்
ஓடுதம்மா மனிதர் பச்சைரத்தம்

பார்த்ததும் உழவர் பதைபதைத்தார் - கோனார்
வயலில் கரையேறி வீடடைந்தார்
போர்த்திகொண்டு பாயில் படுத்துவிட்டார் - பயத்தில்
புதைந்து உறக்கத்தில் கனவுகண்டார்

நெட்டையாய் குங்கும சிவப்பாக - பச்சை
நிரமான விழியுடன் வானவர்போல்
சட்டென்று தோன்றி ஒரு மனிதர் - வயலில்
சமாதி நான் கொண்டுள்ளேன் என்றுரைத்தார்

என் பெயர் தாவூத் அன்புமைந்தா - இங்கு
ஈராயிரம் வருடம்முன் நானிருந்தேன்
நன்றுநீ நாச்சிகுளத் தாரிடம் - சென்று
நலமாக எனைப்பற்றி சொல்க என்றார்

கருப்பையா கோனாரின் வார்த்தைகளை - கேட்டு
கபுர் ஷரீஃப் கட்டினார் இசுலாமியர்
வழிவழியாய் மக்கள் கூடுகின்றார் - தருகா
வாசலில் வாழ்க்கையைத் தேடுகின்றார்

நபியாக வந்து அடக்கம் பெற்றார் - தாவூத்
ஒலியாக அற்புதம் ஓங்குகின்றார்
புவியோரே ஷெய்கு தாவூத்ஒலி - நபியின்
சங்கையை உணர்ந்து போற்றிடுவீர்

கபீர்கான் ஹமீத்கான் இருபெரியோர் - அவர்கள்
சந்ததிகள் மஜாரை பேணுகின்றார்
தவம்நிறை நபிஒலி கனவினிலும் - மக்கள்
நனவிலும் வந்தருள் புரிகின்றார்

## பாசம் மிகுந்த பரமனின் தூதர்

இறைத்தூதர் தாவூத் (அலை) அவர்கள், கி.மு. 990 ஆம் ஆண்டு அதாவது இன்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு பலஸ்தீன் நாட்டிலுள்ள பெத்லஹேம் நகரில் பிறந்தார்கள். அய்ஷா என்ற பெயருடைய இவர்களின் தந்தையார் நபி யாகூப் (அலை) அவர்களின் மகனான யஹூதா கோத்திரத்தில் பிறந்தவர்கள் ஆவார்கள்.

இவர்களுடன் பிறந்த சகோதரர்கள் 11 பேர் ஆவார்கள். அனைவருக்கும் இளையவரான தாவூதை சிறு வயதிலேயே இறைவன் தன் திருத்தூதராக தேர்ந்தெடுத்துக் கொண்டான். ஜபூர் என்ற வேதத்தையும் அவர்களுக்கு வழங்கினான்.

ஜபூர் வேதத்தின் பாடல்களை இவர்கள் இன்குரலால் எழுபது வகையான இராகங்களில் பாடும்போது மலைக் குன்றுகளும், ஆடு மாடு ஒட்டகை போன்ற விலங்கினங்களும், மயில் குயிலோடு மணிப்புறாவும் கிளிகளும், அனைத்து வகையான பறவைகளும் இவர்களுடைய இனியகுரலோடு சேர்ந்து இறைவனை துதித்து பாடிக்கொண்டிருந்ததாக வரலாறு கூறுகிறது.

## பாசம் மிகுந்த பரமனின் திருத்தூதர்

*காடு கழனியில் நடக்கின்றார் - பாலர்*
*கால்நடை மேய்த்து திரிகின்றார்*
*ஆடுகளோடு ஓடுகின்றார் - பாலர்*
*ஆனந்தமாகப் பாடுகின்றார்*

*வல்ல சிறுவராம் தாவூது - அவர்*
*குறும்புத்தனங்கள் புரிகின்றார்*
*கள்ளமில்லாமல் சிரிக்கின்றார் - இவரை*
*கண்டெடுத்தான் இறை நபியாக*

*யூதேயா தேசத்தில் பெத்தலெகம் - அங்கு*
*இஸ்ரவேல் கோத்திரர் அய்சாவாம்*
*தாதைக்கு தமையனாம் தாவூது - இவர்*
*தமையன்மார் பதினோறு பேராகும்*

*அஸ்மவீல் நபியென்ற அருளாளர் - இறை*
*அறிவித்தான் அவருக்கு தாவூதை*
*விசுவாசி அய்சாவின் மகன்நபியாம் - அந்த*
*விவரம் உணர்ந்தார் அஸ்மவீல்*

*தாவூதை தேடிய அஸ்மவீல் - அய்சா*
*தன்னிடம் விவரிக்க அவர்சொல்வார்*
*''பாவப்பட்ட சிறுவன் தாவூது - அவன்*
*பலனொன்றும் இல்லாத சிறுகுறும்பன்*

*தந்தைஎன் சொல்லுக்கு மாறாமல் - கையில்*
*தடியோடு ஆடோட்டி அலைகின்றான்''*
*விந்தை மிகுந்தார் அஸ்மவீல் - வந்து*
*விரைந்து காட்டுக்குள் தேடுகின்றார்*

ஓடும் குளிர்நீர் ஓடையிலே - ஆடுகள்
ஒவ்வொன்றாய் குளிப்பாட்டும் சிறுபாலர்
வேடிக்கை பார்க்கின்றார் அஸ்மவீல் - ''இறைவா
விரும்பினாய் இவரை? ஏன்?'' கேட்கின்றார்

தேக்கு மரத்துக்கும் பின்னாலே - தனக்கு
தெரியாமல் நபிநிற்ப தறியாமல்
மூக்கினால் சிறுகுட்டி மறிமடியை- சிறுவர்
முட்டி முட்டி சிரிப்பு மூட்டுகின்றார்

நாக்கினால் மறிகுட்டிதன் மார்பை - அன்பால்
நக்கிட ஆசையோடு அணைக்கின்றார்
மாக்களாய் மறிகளை கருதாமல் - தாவூத்
மரியாதை தருகின்றார் உயிர்களுக்கு

பார்த்துக்கோண்டே நின்றார் அஸ்மவீல் - இறைவன்
''பார்த்திரா தாவீதின் பாசநெஞ்சை
கோத்திரம் பாராமல் குணம் பார்த்து - நாமும்
கொடுப்போம் நபி பட்டம்'' எனபகர்ந்தான்

பார்க்கும் உயிர்களை பரதெய்வம் - படைத்த
படைப்பாகப் பார்ப்பதே நற்குணமாம்
நோக்குமிடம் தோறும் தெய்வீகம் - அதனை
நுகரும் பண்புதான் இறைநேசம்

## அரக்கனை கொன்று அரசரான வாலிபர்

நபி தாவூத் (அலை) அவர்கள் இளம் வாலிபராக இருந்தபோது அவர்களின் சமூகமான இஸ்ராவேலர்களின் மீது ஜாலூத் என்ற அரக்கன் அடிக்கடி படையெடுத்து வந்து கொடுமை புரிந்தான். இஸ்ரவேலர்களின் மன்னனான தாலூத் அரக்கனை அடக்க முடியாமல் திணறினான்.

வாலிபரான தாவூத் நபி ஜாலூத்தை எதிர்த்து முறியடிக்க துணிந்து வந்து சூளுறைத்தார்கள். கொடியவன் ஜாலூத்தின்முன் தனித்துச் சென்று, இறைவன் அவர்களுக்கு வழங்கிய மூன்று கற்களைக் கொண்டு, கவண்கல் வீசி அவன் முகத்தை சேதப்படுத்தி கொன்றார்கள்.

மன்னன் தாலூத் வாக்களித்தபடி பல்வேறு சோதனைகளுக்குப்பின் அவனது மகளை மணமுடித்து இளைஞர் தாவூத் பலஸ்தீன இராஜ்ஜியத்தின் அதிகாரத்தைப் பெற்றார்கள்.

இஸ்ரவேலர்களின் அரசராகிவிட்ட தாவூத் நபியை குடிமக்கள் அதிகதிகமாக நேசித்தார்கள். இவர்கள் அரியணையில் ஏறி நாற்பது ஆண்டு காலத்திற்குப் பிறதுதான் நபிப்பட்டம் வழங்கப்பட்டது என்று ஒரு வரலாற்றில் காணப்படுகிறது.

## தரணி ஆளும் தாவூத் நபி

*கல்லால் அடித்து கொன்றார் - அரக்கனை*
*கவண்கல்லை வீசி கொன்றார்*
*வல்ல சிறுவர் தாவூத் - ஜாலூத்தை*
*கொடியோனை கொன்றொழித்தார்*

*இஸ்ரவேல் கூட்டத்தாரை - ஜாலூத்*
*இராப்பகல் நடுங்க வைத்தான்*
*அசுரனை அடித்து கொன்றார் - தாவூத்*
*அச்சத்தை நீக்கி வைத்தார்*

*மாமன்னன் பெயர் தாலூத் - அவனோ*
*பலவானைத் தேடுகின்றான்*
*தீயன்ன கொடியவனை - ஜாலூத்தை*
*ஜெயித்திட ஆள் தேடினான்*

*ஜாலூத்தை கொல்பவனே - என்மகள்*
*ஜம்ருத்தின் கணவன் என்றான்*
*கோலோச்சும் இளவரசாய் - அவனுக்கு*
*சூடுவேன் பட்டம் என்றான்*

*இறைவனின் உதவிகொண்டு- ஜாலூத்தை*
*இல்லாமல் அழித்திடவே*
*பரியேறி பறந்து சென்றார்- தாவூத்*
*பகிரங்க சூளுரைத்தார்*

*முக்கல்லை இறைகொடுத்தான் - அவற்றில்*
*முதற்கல் அக்கல் அடா*
*சிக்கலில் கைகொடுக்கும் - மறுகல்*
*சிறப்புள்ள தவக்கல் அடா*

*குக்கல்போல் ஜாலூத்தை - அடித்து*
*கொன்ற கல் ஒருகருங்கல்*
*ஹக்கல் யகீன் என்றகல் - நெஞ்சம்*
*ஆதியின் வீடென்ற கல்*

*முதற்கல் ஹாரூனின்கல் - அடுத்த*
*இரண்டாம்கல் யாகூபின் கல்*
*அதற்குப்பின் இஷ்ஹாக்கின்கல் - தாவூத்*
*முக்கல்லால் முடித்துவிட்டார்*

*கல்லால் அடித்து கொன்றார் - அரக்கனை*
*கவண்கல் வீசி கொன்றார்*
*வல்ல சிறுவர் தாவூத் - ஜாலூத்தை*
*கொடியோனை கொன்றொழித்தார்*

*தாலூத்தின் அரியணையில் - அமர்ந்து*
*தரணியை ஆளுகின்றார்*
*தாவூது இராஜரிஷி - நீதி*
*சர்தாராய் புகழ் படைத்தார்*

## ஈசா முகம்மதின் பாச தந்தை

பைத்துல் முகத்தஸின் அரண்மனையில் அமர்ந்து பார்புகழ நல்லரசு ஓச்சிய - பரமனின் தூதர் நபி தாவூத் (அலை) அவர்களின் வாழ்கையில் ஒரு விசித்திரமான சம்பவம் நடக்கிறது. 99 மனைவிகளுடன் வாழ்ந்த அவர்களின் ராஜபோக வாழ்கையில் பத்தாஷாயா என்ற மங்கை குறுக்கிடுகிறாள். இருவரும் உயிருக்குயிராய் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள்.

படைமேல் சென்ற அவள் கணவன் திரும்பும்முன் தாவூத் நபிக்கும் பைங்கிளி பத்தஷாயாவுக்கும் உறவு ஏற்பட்டு விடுகிறது. அந்த உறவின் காரணமாக அவள் கருத்தறித்து விடுகிறாள். அவள் கணவன் ஊரியா ஊர் திரும்பியதும் அவன் உறவை முறித்து கொண்டு பத்தாஷாயா நபி தாவூத்தின் அந்தபுரத்தில் வந்து புகுந்து விடுகிறாள்.

ஊரியா நேரில் வந்து வழக்குரைக்கும் போதுதான் தாவூத்(நபி) தான் செய்த தவறறிந்து வருந்துகிறார்கள். தான் பாவியாகி விட்டதாக பதைபதைக்கும் நபி பெருமான் ஆற்றாமையால் அழுதழுது மடிகிறார்கள். அவர்கள் இறைவனிடம் மன்னிப்பு கோரி பாடிய பாடல்களைக் கேட்டு விலங்கினங்களும் பறவைகளும் கூட வேதனையால் விம்மி மடிந்ததாக வரலாறு கூறுகிறது.

மனைவியை இழந்து நஷ்டமடைந்த ஊரியாவுக்கு இறைவன் சொர்க்கத்தை பகரமாக வழங்குவதாக கனவில் வாக்களிக்கிறான். ஊரியா மன்னரை மன்னித்து விடுகிறான். இதற்கிடையே நபியின் காதலி பத்தாஷாயா பெற்றெடுத்த ஆண் குழந்தை தான் பின்னர் நபி சுலைமான் (அலை) அவர்களாக, வளர்ந்து அவர்களின் வாரிசாகவும் விளங்குகிறார்கள்.

நபி சுலைமான் (அலை) அவர்களின் சந்ததியில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு உலகம் புகழும் ஏசு நாதர் என்ற நபி ஈசா(அலை) அவர்கள் பிறந்ததாக விவிலிய நூல் சான்று பகர்கிறது. விந்தையிலும் விந்தையாக நபி தாவூத் (அலை), நபி சுலைமான்(அலை), நபி ஈசா (அலை) அவர்களின் சந்ததியினராக பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்களின் தாயார் அன்னை ஆமினா அவர்கள் மதினமா நகரில் தோன்றியதாக வரலாற்று ஆய்வு ஒன்று கூறுகிறது.

தீர்க்கதரிசிகளின் தந்தையார் என்று உலகம் புகழும் நபி இபுறாகிம் (அலை) அவர்களின் வரலாறு உலகம் அறிந்த ஒன்றாகும். அவர்களின் மைந்தர்களில் ஹாஜிரா அம்மையார் பெற்ற நபி இசுமாயில் (அலை) அவர்களின் அறுபதாவது தலைமுறையில் அப்துல் முத்தலிபின் மைந்தர் அப்துல்லாவின் மைந்தராக பெருமானார் முகம்மத் நபி (ஸல்) பிறந்தார்கள்.

இந்த வம்சாவழி இஸ்மாயில் நபியின் பன்னிரண்டு மைந்தர்களில் கேதார் என்ற ஹைதரில் தொடங்கி, ஜமால், பபெய்ல், பின்தா சல்மான், ஹம்யாஸா, ஆது, ஆதி, அதினான் என வளர்ந்து நபி இபுறாகிம் (அலை) அவர்கள் காலத்துக்கு இரண்டாயிரம் வருஷத்துக்குப்பின் குஷை, அப்துல் முனாஃப், ஹாசிம், அப்துல் முத்தலிப், அப்துல்லா என்று நீள்கிறது.

பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த தந்தை வழி முன்னோர்களில் யாரும் தீர்க்கதிரிசிகளாய் இருந்ததில்லை. பெரும்பாலானோர் வியாபாரிகள். இவர்களில் இறைவன் பெருமானார் (ஸல்) அவர்களின் நுபுவத் என்னும் தீர்க்கதரிசன பண்பை மாற்றி மாற்றி கொண்டு வந்தான் என்று இஸ்லாமிய கிரந்தங்கள் புகழ்ந்து வருகின்றான.

நுபுவத் என்கின்ற தீர்க்கதரிசன பண்பு, ஆதமுக்கு அனைத்து பெயர்களையும் (அறிவையும்) கற்று கொடுத்தோம் என்று குர்ஆனில் இறை கூறும் அறிவில் ஒன்று தான் என்ற கருத்தில் யாருக்கும் மாற்று கருத்து இருக்கமுடியாது.

இது கவித்துவமல்ல ஆனால் அதைப் போன்ற வேறொரு புனிதப் பண்பு தான். அதனால்தான் பெருமானார் (ஸல்) "நான் உங்களைப் போன்ற மனிதன் தான் இறைவனிடமிருந்து வஹி என்னும் உள்ளொளியறிவு என் இதயத்தில் இறங்குவதை தவிர" என்றார்கள். இது விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி அறிவியல் பண்பல்ல. இது கலைஞர்களின் இலக்கிய ஓவிய பண்பல்ல ஆனால் அது போன்ற வேறொரு மனிததெய்வீக பண்பு.

எனவேதான் வஹ்தத்துல் உஜூத் என்ற ஏக உள்ளமை தத்துவ சித்தாந்தத்தின் முன்னவர் ஷெய்குல் அக்பர் முகியித்தீன் இபுனுல் அரபி அவர்கள் வஹி என்ற தீர்க்கதரிசனத்தை பற்றி ஃபுத்துஹாத்துல் மக்கியா என்ற நூலில் பின் வருமாறு கூறுகிறார்கள்.

திருக்குர்ஆன் என்பது வானத்தில் உள்ள அல்லாஹ் என்ற நபர் எழுதி போட்ட கடிதம், இதனை முகம்மத் என்னும் அரேபியருக்கு ஜிப்ரீல் என்ற தபால்காரர் கொடுத்து பட்டுவாடா செய்தார் என்பது பாமரத்தனமான கருத்து என்று கூறுகிறார்கள்.

நுபுவத் என்ற இறைதூதுத்துவ வேத வெளிப்பாடு அல்லது வேத வசன கிரகிப்பு என்பதெல்லாம் தெய்வ நெருக்கம் (குருபே இலாஹி) என்கின்ற மனித பண்பினால் ஏற்படும் விளைவுகள் என்று இபுனுல் அரபி விளக்குகிறார்கள்.

நபி இபுறாஹிம் (அலை) அவர்களுக்கும் அவர்களின் மனைவி சாராவுக்கும் பிறந்த நபி ஈசாக்கு (அலை) அவர்களின் சந்ததியில், நபிமார்கள் யாகூபு (அலை) யூசுப் (அலை) யூனுஸ் (அலை) ஐயூப் (அலை) மூசா (அலை) தாவூத் (அலை) சுலைமான் (அலை) ஈசா (அலை) முதலிய பதினைந்து தீர்க்கதரிசிகள் தோன்றியுள்ளனர். இவர்களிடம் நுபுவத் என்னும் பண்பு சந்ததி சந்ததியாக தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது.

நபிமார்களின் முத்திரை இறுதி தீர்க்கதரிசி என்ற பெருமைக்குரிய எம்பெருமான் முகம்மது நபி (ஸல்) அவர்களின் தந்தை வழி, நபிமார்களின் தந்தை நபி இபுறாகிம்(அலை) அவர்களை சென்றடைகிற பெருமையை பேசிக் கொண்டிருக்கும் ஆணாதிக்க சமுதாயம், அண்ணலெம் பெருமான் (ஸல்) தாயார் ஆமினா அவர்களின் முன்னோர்கள் யார் என்று ஆராயாமல் விட்டுவிட்டது வேதனைக்குரியது.

‘அன்னை ஆமினா அவர்கள் யத்ரிப் என்னும் மதினா நகரில் ஜொஹ்ரா என்னும் குலத்தினரின் தலைவரான வஹ்ப் பின் அப்துல் முனாஃப் என்பாரின் மகள், தன் சிறிய தந்தையரான உஹைபுடன் இவர்கள் மக்கா வந்திருந்தபோது அப்துல் முத்தலிப் அவர்கள், இம்மங்கையரை தம் மைந்தர் அப்துல்லாவுக்கு மணம்பேசி முடித்தார்கள்.’

அன்னை ஆமினா அவர்களைப் பற்றி கிடைக்கும் அதிகபட்சமான தகவல்கள் இவ்வளவுதான். ஆனால் அன்னையின் அன்னை யார்? அவர்களின் தாயாரும் பாட்டி யாரும் பூட்டியாரும் யார்? இந்த கேள்விகளுக்கு பதில் கிடையாது.

ஏனெனில் உலகமுழுவதிலும் ஆணாதிக்கம் நிலவுகிறது. உலகில் எல்லா திசைகளிலும் இதுதான் உண்மை. உலகம் போற்றும் உத்தமன் இராமபிரானின் தந்தை வழியைக் கூட பல அடுக்காக சொல்கிறார்கள். அவனது உத்தம மனைவி கற்புக்கரசி சீதையை ஜனகனின் மகள் என்பார்கள். சீதையின் தந்தை வழியை சொல்வார்களே தவிர தாய்வழியை சொல்ல மாட்டார்கள்.

ஆனால் அறிவியலின் ஒரு உண்மையை நினைத்து பார்க்க மனித சமுதாயம் கடமைப் பட்டிருக்கிறது. ஒரு மனித கரு உருவாவதற்கு ஒரு ஆணின் கருவிலிருந்து இருபத்து மூன்று மரபணுக்களும் பெண்ணின் கருவிலிருந்து இருபத்து மூன்று மரபணுக்களும் கட்டாயமாகத் தேவைப்படுகின்றது.

உயிரின் இரகசியம் என்று அறிவியல் கருதும் ஆண் பெண்ணின் மரபணுக்களின் இணைவுதான் கரு உருவாவதற்கும், கரு வளர்ந்து மனிதனாகும்போது அவன் உடல் அமைவுகளுக்கும் உள்ள குணப்பண்புகளுக்கும் அடிப்படை காரணமாயிருக்கிறது. மனித சமுதாயம் பெண்ணின் மரபணுவுக்கு முக்கியம் தராமல் மிகப் பெரிய துரோகம் செய்கிறது.

பெருமானார் (ஸல்) அவர்களின் தந்தையார் அப்துல்லா அவர்களின் தந்தைவழி முன்னோர்கள், நபி இபுறாஹிம் (அலை) அவர்களின் மகனார் இசுமாயில் (அலை) அவர்களின் சந்ததி என்று உறுதிப்படுத்தி பெருமைப் படுகின்றோம்.

அதே நேரத்தில் எம்பெருமானின் தாயார் புனிதவதி அன்னை ஆமினாவின் தாய்வழி முன்னோர்கள், நபி ஈசா (அலை) அவர்களுக்கும் அவர்களின் காதலியர் புனிதவதி மரியா மகதலேனாவுக்கும் பிறந்த மகள் சாராவின் சந்ததியினர் என்பதை காலம் மறைத்திருப்பது வரலாற்றின் வஞ்சனையாகும் என்று உணர்ந்துகொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

நபி பெருமான் ஈசா (அலை) அவர்களின் கால கதிக்குபிறகு நூற்றைம்பது ஆண்டுகளில் ஜெருசலத்தில் ஏற்பட்ட பெரும் கலகத்தை அடுத்து அங்கிருந்து வெளியேறிய யூத கிருஸ்துவ அப்பாவி மக்கள் உலகில் பல பகுதிகளுக்கும் சிதறிச் சென்று குடியேறினர்.

அவர்களில் நெஸ்தூரியன், செபலியன் என்ற குலவழியினரோடு, புனிதவதி மகதலேன் மரியாவின் மகள் சாராவின் சந்ததிகள் குடிபெயர்ந்து, அரபு பாலை நிலத்தில் புகுந்து ஒரு பாலைவன பசுஞ்சோலையின் கரையில் மதினமாநகரத்தை உருவாக்கினவர்களோடு சேர்ந்து வாழ்ந்தார்கள்.

அந்த யூத கிருஸ்துவ சமுதாயங்களிடை அரபுகளின் இனகலப்பில் தோன்றிய ஒரு பெண்மணியின் வழியில், ஈசா(அலை) தீர்க்கதிரிசன மரபணுவை ஏந்தியவர்களாக அன்னை ஆமினா மதினாவில் உதித்தார்கள். காலம் கடந்தாலும் உண்மை உண்மையே.

பெருமானார் (ஸல்) அவர்கள் படிப்பறியாத பாமரர் எனினும் அவர்களை பாராளும் இறைவன், அறிவார்ந்த மேதை நபி இபுறாஹிம் (அலை) அவர்களின் சந்ததிகளில் வஹி என்னும் நுபுவத்துவ அறிவைகொடுத்து குர்ஆன் வேதத்தை கொடுத்து மதபேரறிஞர் ஆக்கினான் என்று வரலாறு கூறி வருகிறது.

அது உண்மை என்றாலும் மேலை நாட்டு அறிஞர்கள், விவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளில் உள்ள அதாவது தவுராத், ஜபுர், இன்ஜில் என்று நாம் கொண்டாடி வரும் வேதபோதங்களில் உள்ள வசனங்கள் திருக்குரானில் எதிரொலிப்பதால்,

‘முகம்மத் சிறுவயதில் சிரியா சென்ற போதும் பின்னர் கதிஜாவின் சகோதரரான வரகா இபுனு நௌபல் என்ற பாதிரியாரிடமிருந்தும் பைபிளை ஓதி உணர்ந்து பின்னர் திருக்குர்ஆன் வெளிப்படுவதற்கு பயன்படுத்தினார்’ என்று பேசுகின்றனர்.

ஆனால் அண்மையில் கிடைக்கும் ஆய்வுகள் ஈசா(அலை) அவர்களின் மகளான சாராவின் சந்ததிகளான கிருஸ்துவ சந்ததிகளை முன்னோராக கொண்ட அன்னை ஆமினாவின் மரபணுக்கள் தான் முகம்மத் நபி (ஸல்) அவர்களின் தீர்க்கதரிசன மகத்துவத்துக்கு காரணமென்று தெளிவுபடுத்துகின்றன.

இந்த ஆய்வுகளின் அடிப்படியில் பார்க்கும் போது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த நபித்துவ ஜோதி நபிமார்களின் தந்தையான நபி இபுராஹிம் (அலை) அவர்களிலிருந்து இரண்டு வழிகளில் பிரிந்து வந்தடைந்திருப்பது புலனாகிறது. தந்தையர் வழியாக கிடைத்த அதன் பாதி, நபி இஸ்மாயில் (அலை) அவர்களில் தொடங்கி அறுபது தலைமுறைகளில் குரைஷிகளின் வம்சத்தில் அப்துல் முனாப், அப்துல் முத்தலிப், அப்துல்லா என்று தொடர்ந்து வந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவ ஜோதியின் மறுபாதி, நபி இபுறாஹிம் (அலை) அவர்களின் மற்றொரு மைந்தர் நபி ஈசாக்கு(அலை) அவர்களில் தோன்றி, பதினைந்து நபிமார்களின் வழியாகவும், மேலும் குறிப்பாக தௌராத் என்னும் வேதம் கொண்ட நபி மூசா (அலை) அவர்களின் சகோதரர்களின் வழியிலும், ஜபுர் வேதம் கொண்ட நபி தாவூத்(அலை) அவர்களின் வழியிலும் தொடர்ந்து,

மரியம்மையின் மகனாரான இன்ஜில் வேதம் கொண்ட நபி ஈசா (அலை) அவர்களின் கருவை சுமந்த காதலியர் மகதலேன் மரியாளின் மகள் சாராவின் வழியாக புனிதமிகு அன்னை ஆமினாவின் மரபணுக்களாக வளர்ந்து தந்தையர் அப்துல்லாவின் மரபணுக்களோடு சங்கமித்து,

இருகண் குளிர்ந்த இதயஜோதி அர்ஷின் தலைவர் முகம்மத்(ஸல்) என்னும் புனித மனித கருவாக, இன்சானே காமில் -சம்பூணம்பெற்ற சாந்தி மனிதராக, இறுதி இறைதூதராக நபிமார்களின் முத்திரையாக, மறைபுகழ இறைபுகழ உலகில் வெளிப்போந்தது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் பெருமானார் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் என்னும் மதினா வருகையை மக்காவில் குர்ஆன் வசனங்களாக முன்னறிவித்த இறைவன் பின்வருமாறு கூறியுள்ளான்,

"(மதினாவில்) வேதம் கொடுக்கப்பட்ட (யூதர், கிருஸ்துவர்களிடையே) முகம்மதாகிய இவர் வரும்போது, இவரை பெற்றோர்கள் தங்கள் குழந்தையை அடையாளம் காண்பதுபோல கண்டுகொள்வார்கள்" - திருக்குர்ஆன் 6 : 20.

அதாவது முகம்மத் தமது முன்னோர்களும் நபிமார்களுமான நபி மூசா தாவூத் ஈசா ஆகியோரின் சந்ததியினர் என்று மதினாவில் உள்ள வேதம் கொடுக்கப்பட்டவர்கள் கண்டுகொள்வார்கள். இவ்வாறு திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.

“மாதாவின் காலடியில் மணிசுவர்க்கம்” என்பது அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களின் பொன்மொழி. அது பொதுவான பொன்மொழி என்று கூறி விடலாம். ஆனால் எந்த மனிதனின் வாயிலிருந்தும் சொந்த அனுபவம்தான் பொன்மொழியாக வரமுடியும்.

பெருமானார் முகம்மத் (ஸல்) அவர்களின் பெற்ற தாயுடனான வாழ்க்கை அனுபவமென்பதென்ன? அவர்கள் பிறக்கும் முன் தந்தையை இழந்தார்கள். பிறந்த ஏழாம் நாளிலேயே தாயின் மார்பில் பால் வரண்டு போனதால் தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு வளர்ப்புத்தாய் அன்னை ஹலிமாவிடம் வளர்ந்தார்கள்.

மூன்று வயதில் ஹலிமாவோடு மதினா திரும்பிய அவர்களை வரவேற்க மக்க நகர் தயாராக இல்லை. பின்னர் ஆறு வயதில் ஹலிமாவால் தாயிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள், தாயின் சொந்த பூமியான மதினாவுக்கு சென்று தந்தையரின் புனித கபர் ஷரீப்பை ஜியாரத் செய்துவிட்டு தாயின் உறவினர்களோடு தங்குகிறார்கள்.

இரண்டு மாதத்திற்கு பிறகு மக்கநகர் திரும்பும் வழியில் அபவா என்னும் இடத்தில் தாய் ஆமினாவும் மரணத்தின் கரங்களால் பிடுங்கப்பட்டு பாலகர் முகம்மத் பயங்கர அனாதை ஆகிவிடுகிறார்கள்.

வரலாற்றை வடிகட்டிப் பார்த்தாலும் தன் ஆறு வயது பருவத்தில் மூன்று அல்லது ஆறு மாத காலம் எம்பெருமான் முகம்மத் (ஸல்) தன் தாயாரோடு வாழ்ந்திருக்கிறார்கள், அல்லது தாயுடன் வாழ்ந்த அனுபவத்தை பெற்றிருக்கிறார்கள்.

அந்த குறைந்த அனுபவத்தோடு அவர்கள் பேசும் “மாதாவின் காலடியில் மணிசுவர்க்கம்” என்ற பொன்மொழி ஆராயப்பட வேண்டாமா? ஆராயப் புகுந்தால் நம்முன் முனைந்து நிற்பது “சுவர்க்கத்தின் திறவுகோல் தொழுகை” என்ற அவர்களின் மற்றொரு பொன்மொழியாகும்.

ஆம் சந்தேகமில்லாமல் முகம்மத் நபி (ஸல்) அவர்கள், ருக்குவை சுஜூதை, குனிந்தும் சிரம்பணிந்தும் இருப்பில் அமர்ந்தும், பிரார்த்திப்பதுடன் கூடிய தொழுகை முறையை தன் தாயிடமிருந்து ஆறு வயதில் கற்று தெரிந்துகொண்டார்கள் என்பதுதான் உண்மை.

பெருமானார் அவர்களின் அன்னை ஆமினா அவர்கள் ஈசா (அலை) அவர்களின் தாயைப்போல மகத்துவமுடைய மாதரசியாவார்கள். மேலும் மரியத்தின் பேத்தி ஈசா மகதலேனின் மகள் சாராவின் வழியில் தோன்றி அருள்மறை குர்ஆன் வலியுறுத்தி கூறும் மூசா, தாவூத், சுலைமான், ஜக்கரியா, யஹியா ஆகிய நபிமார்களிடம் இருந்த ருக்குவு சுஜூதுடைய தொழுகை முறையை, தாய் வழி வழியாக அறிந்து உணர்ந்திருந்தார்கள்.

மேலும் இபுறாஹிம் (அலை) அவர்களிலிருந்து தொடர்ந்து வரும் ஹனிஃபுகள் என்னும் ஏகத்துவவாதிகளின் தவ முறையான, சுஜூது செய்யும் இடத்தில் பார்வையால் உற்று நோக்கும் பரஞ்ஜோதி தவயோகத்தை அன்னையிடமிருந்தே பெருமானார் (ஸல்) அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

இது வரலாற்றால் புறக்கணிக்கபட்டிருக்கும் உண்மை. எம்பெருமான் முகம்மத் (ஸல்) அவர்கள், இபுறாஹிம் (அலை) அவர்களுக்கும், நபி இஸ்மாயில் (அலை) அவர்களுக்கும் மட்டுமே பேரனார் அல்ல. நபி மூசா, நபி தாவூத், நபி சுலைமான், நபி ஈசா (அலை) ஆகியோருக்கும் குலவழி பேரனார் ஆவார்கள்.

## கன்னியின் கண்களில் கடவுளின் ஜோதி

*பைத்துல் முகத்தஸ் பள்ளி வாசலில்*
*படுத்திருந்தார் நபி தாவூது*
*பைந்தொடி பத்தஷாய் மடிமலரணையில்*
*சாய்ந்திருந்தார் நபி தாவூது*

*பரமனின் புகழை வெண்கல தொனியில்*
*பாடுகின்றார் நபி தாவூது*
*நறுமணம் கமழும் நங்கையின் மார்பில்*
*நலம்கண்டார் நபி தாவூது*

*“ஆண்டவனேநீ எனைஏன் படைத்தாய்*
*அதனை அடியேன் நானறியேன்*
*கூண்டு கிளிஇவள் சிறையை உடைத்து*
*கூவி அழைத்ததின் பொருளறியேன்*

*“இன்பமும் காதலும் இயற்கையின் நியதி*
*இறைவா இதனை நானறிவேன்*
*அன்பின் வழியாம் அதுவே உயிர்நிலை*
*அதையும் இறைவா நானறிவேன்*

*“பாரில் எனக்கிவள் பாரியாள் என்றால்*
*பார்ப்பதர்க் கழகாய் இருக்காதோ*
*நேரில் வராமல் திரைமறைவில் ஏன்*
*தேடுகிறோம் இன்பம் பொறுப்பாயோ?”*

*ஆறுதலாக இறைபேசும் வார்த்தை*
*அப்போது பள்ளியில் ஒலிக்கிறது*
*“ஹூர்லீன் இவள்உம் பாரியாள் முந்தைய*
*ஜென்மாந்த பந்தம் தொடர்கிறது*

*''பெண்மையில் ஆண்மை பிள்ளை மழலைகள்*
*பிறந்திட உலகம் தழைக்கிறது*
*உண்மையில் பெண்மை உள்ளார்ந்து குளிர*
*உயிரில் தெய்வம் குழைகிறது''*

*ஆண்டவன் குரலை கேட்டதும் குளிந்தார்*
*அரசர்க்கு அரசர் தாவூது*
*கூண்டு கிளியின் சிறகை விரித்து*
*கூடி களித்தார் தாவூது*

*பொழுது விடிந்தது புறப்படு கின்றாள்*
*புறா பெண்பேடு தன்மனைக்கு*
*தொழுது முடித்து தூயவள் பார்வையை*
*தொடுகின்றார் நபி தாவூது*

*காதலி பத்தஷாய் காந்தர்வ கண்களில்*
*கடவுளின் ஜோதி தெரிகிறது*
*தூதர்கள் ஏசு முகம்மதின் தோற்றம்*
*தொடுவான் பிறைபோல் மிளிர்கிறது*

*''இவளிரு விழியில் இரு முல்லைகள்*
*இவர்கள் யார்?'' நபி கேட்கின்றார்*
*உமதொரு மகன்வழி உன்னத நபிமார்*
*உலகில் தோன்றுவர்'' பகர்கின்றான்*

*கிழக்கிலும் மேற்கிலும் கிருஸ்துவம் இசுலாம்*
*கிளைத்திடும் தெய்வீக சன்மார்க்கம்*
*வழக்கில்லை வம்பில்லை வல்லான் வகுத்தது*
*வாழிய தந்தையர் தாவூது*

## மனம் பதைத்த மாதொரு பாகன்

*காதலி பத்தஷாயாவுடன் இராஜரிஷி தாவூத் நபிக்கு ஏற்பட்ட உறவு ஆகுமானதா? ஆகாததா? நபிமார்கள் பாவத்திற்கு அப்பாற்பட்ட பரிசுத்தவான்கள் என்பது உண்மையா? இல்லையா? விவிலியமும் வரலாற்று நூல்களும் விடைதராத இந்த கேள்விகளுக்கு யார்தான் பதில் தருவது?*

*பத்தஷாயாவின் கணவன் எழுப்பிய வழக்கு, அதன் காரணமாக மனமுடைந்து போன பரமனின் தூதரின் பரிதாப நிலை. இராஜரிஷியின் வேதனை கண்டு நொந்துபோன ஜீவராசிகளின் கையறு நிலை! நடந்தது என்ன? ஆகிய நிகழ்வுகளுக்கு இறைவனின் பதில் என்ன?*

## ஆகும் என்பது அவளது சம்மதம்

*காதலி பத்தஷாய் தன்கணவன் -போரில்*
*கடல்தாண்டி சென்றவன் திரும்பிவிட்டான்*
*பேதலித்து நபி மனமுடைந்தார் - நடந்த*
*பிழையை நினைத்து வருந்துகின்றார்*

*“மாதொரு பாகனாய் மாறிவிட்டேன் - இறைவா*
*மங்கை பத்தஷாயை நெஞ்சில் வைத்தேன்*
*ஆதியில் ஆதம் ஆனதுபோல் - இறைவா*
*அகிலத்தில் பாவியாய் ஆகிவிட்டேன்”*

*அலைகடல் போலவும் ஆர்ப்பரித்தார் - தாவூத்*
*அழுகுரல் விண்தொட பதைபதைத்தார்*
*தலைகவிழ்ந்தார் மண்ணில் சுஜூதுசெய்தார் - மன்னர்*
*தன்னிலை தடுமாறி நிலைகுலைந்தார்*

*ஊரியா ஊருக்கு திரும்பிடவே - நடந்த*
*உண்மையை அறிந்து குழம்பிடவே*
*பாரியாள் அரசரின் பஞ்சணையில் - சென்று*
*பணிந்ததை அறிந்து வழக்கிடவே*

*“அந்தப் புரத்தில் தொன்னூறுடன் - மேலும்*
*ஒன்பது அழகிகள் காத்திருக்க*
*சொந்தம் எனக்கிந்த பத்தஷாயை - மன்னர்*
*கொண்டனர் பெண்டாள நியாயமுண்டோ”*

*கேட்கின்றான் கேள்விக்கு பதிலில்லை - மன்னர்*
*கேவி கேவி கேவி அழுகின்றார்*
*தாக்கி இடிமரம் சாய்ந்ததுபோல் - தாவூத்*
*சாய்ந்து கிடக்கிறார் மண்தரையில்*

ஆண்டவா ஆண்டவா எனபதைத்து - தாவூத்
அழுகுரல் கேட்டதால் விலங்கினங்கள்
மாண்டு மடிந்தன அழுதழுது - தங்கள்
மன்னரின் பரிதாப நிலையறிந்து

விண்ணில் பறந்திடும் பறவைகளும் - தங்கள்
வேந்தரின் வேதனை பொறுக்காமல்
மண்ணில் விழுந்தன செத்துசெத்து - இந்த
மரியாதை யாருக்கும் நடந்ததுண்டோ

உயிர்களெல்லாம் வீழ்ந்து மடிகின்றன - இறைவா
உத்தம நபியை நீ மன்னிப்பாயோ
துயர் நீங்க இறைவன் ஊரியாவை - ''உனக்கு
சுவர்க்கம் நீ மன்னித்து விலகு'' என்றான்

இறைகுரல் கனவினில் செவிமடுத்தான் - வீரன்
''மன்னரை மன்னித்தேன்'' என்றுரைத்தான்
மறைநபி வாழ்க வாழ்க என்றான் - நபி
மன்னிப்பை ஏற்று அமைதிகொண்டார்

கைகளில் சிசுவேந்தி வந்துநின்றாள் - பத்தஷாய்
கண்களில் காதலை சிந்துகின்றாள்
சைகையால் உணர்ந்திட்ட மாமன்னர் - பிள்ளை
தன்போலிருக்க மனம் குழைந்தார்

''ஆகும் ஆகாது என்பதெல்லாம் - ஹக்கின்
அர்த்தத்தில் அவள்சம் மதமாகுமாம்''
ஏக பராபரன் உணர்த்துகின்றான் - நபி
''இறைவா பொருந்தென்னை'' என்கின்றார்

''பொறுத்தேன் உம்மை பொருந்திக்கொண்டேன் - நபியே
புலர்ந்தது பொழுதுநீர் எழும்'' என்றான்
பிறந்த பிள்ளைதான் சுலைமானாம்
பிரபஞ்சம் முழுமைக்கும் கலீஃபாவாம்

காற்றுக்கும் கடலுக்கும் அவர்அரசர் - தேவ
கணத்துக்கும் ஜின்னுக்கும் அவர்தலைவர்
ஆற்றலுள்ள நபி மதியூகி - அவர்
அறிவை அகிலமும் கைதொழுமாம்

தத்தும் மனம் அது தத்தாமல் - ஒன்றை
சார்ந்துநின்றால் அது உத்தமமாம்
சித்தம் கலையாமல் இருவர்மனம் - ஒன்றி
சேர்ந்து கொண்டால் தெய்வசம்மதமாம்

## கஅபாவைக் கண்ட கவியரசர் தாவூத்

பாவமீட்சி பெற்ற பாராளும் படையரசர் தாவூத் நபி படைபரிவாரங்களுடன் பாலைவன அரபு நாட்டுக்கு பயணம் சென்று, அக்காலத்தில் இஸ்ரவேலர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்த ஃபாரான் பெருவெளியில் அமைந்த பக்கா எனும் பள்ளத்தாக்கில் மக்காவெனும் நகரில் நுழைந்து, ஆண்டவனின் ஆதி ஆலயம் கஅபாவின்முன் சரணடைந்தார்கள்.

கர்த்தாவே ஆண்டவனே தேவனே! என்று கடவுளை புகழ்ந்து துதித்து அவர்கள் பாடிய பாடல்கள் விவிலிய நூலில் பழைய ஏற்பாட்டிலுள்ள சங்கீத புத்தகத்தில் பாடலாக இடம் பெற்றிருக்கிறது.

அடுத்து வரும் பாடல் புனித கஅபாவின் முன் நபி தாவூத்(அலை) பாடிய துதி பாடலாகும்.

பார்க்க:- நபிமார்கள் வரலாறு - 2ஆம் பாகம் - பக்கம் 399
ஆசிரியர் எம். ஆர். எம். அப்துல் ரஹீம்.

## கஅபாவை கண்ட கவியரசர் தாவூத்

*வானில் பட்சி ஜாலங்களும்*
*பூமியில் வன விலங்குகளும்*
*வரிசை கொண்டு நிற்கும் சேனைகளின் தலைவா!*
*உனது வாசஸ்தலங்கள் வாசமுள்ளவை!*
*உனது ஆலயங்களில் பிரவேசிக்க*
*எனது ஆண்டவரே எனது ஆன்மா அனுதினமும் தவிக்கிறது!*
*எனது ஆண்டவரே எனது இருதயமும் குருதி ஓடும் தசைகளும்*
*அனுதினமும் உம்மை அழைக்கின்றன!*
*எனது ராஜாவே எனது தேவனே*
*உமது பீடங்களின் அண்டையில்*
*அடைக்கலான் குருவிகளும் தகைவிலான் குருவிகளும்*
*கூடுகட்டி வாழ்கின்றன!*
*உம்முடைய வீட்டின் அண்டையில் குடியிருப்போர்*
*உம்மை சதாவும் துதிக்கும் பாக்கியவான்கள்!*
*இதயங்களில் உமது வழியைக் கொண்டோரும் பாக்கியவான்களே!*
*பக்காவின் பள்ளத்தாக்கை நெடுகிலும் நடந்து*
*உமது அடியார்கள் நீராதாரங்களை தேடுகிறார்கள்!*
*சேனைகளின் தலைவரே!*
*என் விண்ணப்பங்களை கேளும்*
*யாக்கோபின் தேவனே செவி கொடும்*
*எங்கள் கவசமாகிய தேவனே*
*உம்மால் ஒப்புக்கொள்ளப்பட்டவரின் முகம் பாரும்!*
*உலகில் வாழும் ஆயிரம் நாட்களிலும்*
*உமது ஆலயத்தில் தங்கும் ஒருநாள் உன்னதமானது!*
*ஆடிப்பாடி குதுகலிக்கும் கூடாரங்களில் இருப்பதிலும்*
*உமது ஆலயவாசல் படியில் நிற்பதையே நான் விரும்புவேன்!*
*தேவனாகிய நீரே சூரியனும் சந்திரனும் ஆகுவீர்!*
*ஆண்டவரே உம்மை நம்புகிற மனிதன் பாக்கியவான்!*

## அருஷில் நுழையும் ஆமினாவின் மைந்தர்

அரபகத்திலுள்ள மக்காவினின்றும் புராக் என்னும் சுவனவிலங்கின் மீது அமர்ந்து புறப்பட்டு பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலில் அதன் முற்றத்தில் இறங்கி அருஷ் என்னும் தெய்வ இருக்கையில் அல்லாஹ் ஜல்லஜலாலஹு ஆகிய நாயனை சந்திக்க வந்து கொண்டிருக்கும் பெருமானார் முகம்மத் நபி (ஸல்) அவர்களின் வருகை காட்சி!

அந்நிகழ்வு நடப்பதற்கு 1500 ஆண்டுகளுக்கு முன்பு அக ஒளி காட்சியாக அதனை காணும் நபி தாவூத் (அலை) அவர்கள், இறைவனின் இறுதி திருத்தூதர் தமது சந்ததிகளில் நபி ஈசா (அலை) மகள் சாராவின் குலவழிதோன்றலாக, மதினாவில் பிறக்கப் போகும் புனிதவதி ஆமினாவின் மைந்தராகப் அவதரிக்கப் போவதை அறிந்து பாடிய அற்புத சங்கீதப்பாடல்.

இது விவிலிய நூல் தரும் விந்தை விருந்து!

# தாவூது நபி கண்ட நபி முகம்மதின் மிஃகுராஜ்

அகிலம் முழுவதும் ஆண்டவனின் குடும்பம்
ஓடும் நதிகளும் உயர்ந்த குன்றுகளும்
கடலும் கானகமும் ஆண்டவனுடையவை!

சமுத்திரங்களுக்கு மேலாக பூமியை
உயர்த்தி நதிகளுக்கு அருகில்
குடிகளை வாழவைத்தவன் ஆண்டவன்!

ஆண்டவனுடைய பர்வதமாகிய
அரபகத்தின் பக்கா பள்ளத்தாக்கில்
(ஜபலே நூர் என்ற) மலை குன்றின்
மீது ஏறப் போவது யார்?

அந்த பரிசுத்தஸ்தலத்தில் (ஹிரா
மலை குகையில் ) தவத்தில் நிலைத்
திருக்கப் போவது யார்?

கைகளில் சுத்தமுள்ள (அல்அமீன்
என்ற பெயர் பெற்றவரும் மாசில்லாத
ஆத்துமாவான ரூஹ ஒல்குத்தூஸ்) பரிசுத்தம் என்ற
நாமத்துக்குரிய வருமான அவர் யார்?

அவர் கர்த்தரால் (ரஹ்மத்துன்லில்
ஆலமீன்) அகிலத்தின் மீதோர் அருட்கொடை!

அவர் ஆசீர்வதிக்கப்படுவார் இரட்சிப்பின்
தேவனாகிய இறைவனால் நீதி என்னும்
(ஷரீஅத் ஆகிய) தன் சட்டத்தை கையில் பெறுவார்!

*ஆம் அவரை தேடி விசாரித்து அவருடைய*
*சமுகத்தை நாடுகிறபோது அவர் யாக்கூபின்*
*வம்சத்தில் உதித்த (தாய் ஆமீனா என்ற*
*மாதரசியின்) மைந்தர்!*

*பைத்துல் முகத்தஸ்ஸின் மீதான வானத்தின்*
*வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள்*
*(இறை இருக்கையாம் அர்ஷின்)*
*அநாதி கதவுகளே*
*வானளாவ திறந்து கொள்ளுங்கள்!*

*மகிமையின் ராஜா(வாகிய மதினாவின்*
*அதிபர் இறைவனின் இறுதி திருத்தூதர்)*
*உட்பிரவேசிப்பார்*

*யார் இந்த மகிமையின் ராஜா? அவர்*
*வல்லமையுள்ள பராக்கிரமமுள்ள*
*கர்த்தரின் திருத்தூதர்!*
*சன்மார்க்க விரோதிகளை*
*எதிர்க்கும் யுத்தத்தில் பராக்கிரமசாலி!*

*பைத்துல் முகத்தஸ் மீதான வானத்தின்*
*கதவுகளே உங்கள் தலைகளை உயர்த்துங்கள்*
*அநாதி கதவுகளே உயருங்கள்*
*மகிமையின் ராஜா (கர்த்தரை அருஷில் சந்திக்க)*
*அதோ வருகிறார்!*

*யார் அந்த மகிமையின் ராஜா? அவர்*
*சேனைகளின் தளபதி*
*(அவரே முகம்மதென்னும்) மகிமையின் இராஜா!*

*விவிலியம் பழைய ஏற்பாடு சங்கீதம்24*

## எதிரில் வந்த இஸ்ராயீல்

பல்லாண்டு காலம் பைத்துல் முகத்தஸ்ஸின் அரியணையில் அமர்ந்து நல்லாட்சி புரிந்த நபி தாவூத் (அலை) இறைவனுக்காக ஒரு ஒப்பற்ற பள்ளியை அந்த நகரிலமைக்க முயற்சி மேற்கொண்டிருந்தார்கள். ஒன்றுக்கு மூன்று முறை அவர்கள் அடித்தளமிட்டு எழுப்பிய பள்ளியின் சுவர்கள் சிதைந்து சரிந்தன.

இறைவனோ அடித்தளத்தோடு நிறுத்திவிடுமாறும் பள்ளி வாசலை முழுமையாக எழுப்புவது அவர்களின் மைந்தர் நபி சுலைமான் (அலை) அவர்களின் பொறுப்பு என்றும் உணர்த்துகிறான். பணிவு கொண்ட நபி பெருமான் இறைவனின் உத்தரவைப் பொருந்திக் கொண்டு மக்களுக்கு நல்லாட்சி வழங்குவதில் கவனம் செலுத்துகிறார்கள். நீதி தவறாத நெறிமன்னர் என்ற சிறந்த பெயரையும் பெருகிறார்கள்.

முடிவில் தனது மைந்தர் சுலைமான் நபிக்கு மணிமுடி சூடி மகிழ்ச்சி அடைந்த தாவூத் நபியை அவர்களின் அரண்மனைக்குள்ளேயே வந்து சந்திக்கிறார் இஸ்ராயீல். எனினும் "தங்களை கடல் தாண்டி வேறொரு நாட்டில் வைத்து உயிரை கைப்பற்றவேண்டும் என்பது இறைவனின் கட்டளை" என்று சொல்லிவிட்டு விடைபெருகிறார் மரணமலக்கு.

இந்த சம்பவத்தை அடுத்துவரும் கவிதை விவரிக்கிறது.

## மரியாதை செய்தார் மரண மலக்கு

*சுலைமான் நபிக்கு மணிமுடிசூடி*
*மகிழ்ச்சி அடைந்தார் தாவூது*
*கலகலவென்று கண்ணீருகுத்தார்*
*கவலை நீங்கிநபி தாவூது*

*''இறைவா எனது உலக வாழ்க்கையில்*
*எல்லாம் முடிந்தது இனிதாக*
*அறிவாய் இனிநான் உன்சன்னிதியில்*
*அடைக்கலம்'' என்று பணிந்துரைத்தார்*

*அரண்மனை புகுந்தார் அறைக்குள் நுழைந்தார்*
*அமைதி கொள்கிறார் பஞ்சணையில்*
*இருளில் ஒருவன் ஒளிந்து நிற்கிறான்*
*உடன் துணுக்குற்றார் நபிகள் பிரான்*

*''யாரடாஅது?'' பாய்ந்து பிடிக்கின்றார்*
*பிடியை மீறியவர் இஸ்ராயீல்*
*''நீரெதெற்காக ஒளிந்து நிற்கறீர்?'' கேட்கின்றார்*
*மௌத்தின் வரவை அறிகின்றார்*

*''இருந்தாலும் நான் தயங்குகின்றேன் நபிபெருமானே''*
*இஸ்ராயீல் பதில் தொடர்கின்றார்*
*''அருந்தவ ரிஷியே ஆண்டவன் உம்மை*
*அலைகடல் தாண்டி பிடி'' என்றான்*

*மந்தகாசமாய் மரணமலக்கு சிரிக்கின்றார்*
*மாநபி தாவூத் துனிகின்றார்*
*''சொந்த பூமியாம் இந்தியாவுக்கு போகின்றேன்*
*கொள்வீர் என் உயிரை அங்கெ'' ன்றார்*

# இந்தியா என் சொந்த பூமி

தனக்கு மரணகாலம் நெருங்கி விட்டதை அறிந்த பைத்துல் முகத்தஸ் பட்டணத்தின் மாமன்னரும் இறைதூதருமாகிய நபி தாவூத் (அலை) அவர்கள் தம் மனதில் நீண்ட காலமாக மறைந்திருக்கும் ஆசைகளை காலகதி அடைவதற்கு முன்பு நிறைவேற்றிக்கொள்ள விரும்புகிறார்கள். தன்னுடைய ஆவல்களில் சிலவற்றை ஆண்டவனிடம் முறையீடு செய்வதை, நபியின் மைந்தரும் ஜின்னினத்தின் மீதும் காற்றின் மீதும் ஆற்றல் பெற்ற நபி சுலைமான் (அலை) அவர்கள் செவிமடுக்கிறார்கள்.

"நூஹ் நபி காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தில் அழிந்துபோன லெமுரியா என்ற ஆதி பூமியை அதன் அடையாலங்களை பாரத தேசத்திலுள்ள குமரிமுனை என்ற இடத்தில் சென்று நின்று கண்ணோட்டமிடவேண்டும்.

"மனித குலத்தின் ஆதி தந்தை ஆதம் (அலை) அவர்கள் நின்றதாகவும், அவர்களின் பாதம் பதிந்திருப்பதாகவும் கூறப்படும் ஈழத்தீவிலுள்ள பாறைக்குச் சென்று, அந்த இடத்தில் நின்று, படைத்த ஆண்டவனை அவன் மனிதகுலத்தைப் படைத்ததற்காக நன்றி கூறி வணங்க வேண்டும்!

"குமரிக்கு அருகில் சேது கடலின் கரையின் அருகில் அடங்கப்பட்டிருக்கும் ஆதம் (அலை) யின் மைந்தரும் ஆதியில் தோன்றிய சைவ மதத்தின் முன்னவருமான சிவபெருமான் என்ற காயீனின் மஜார் ஷரீஃபை தரிசிக்க வேண்டும்!

"பாரதத்தின் கிழக்குக் கடற்கரையில் தோனியப்பர் என்ற பெயருடன் ஜலப்பிரலயத்திலிருந்து உயிரினத்தைக் காப்பதற்காக மிகப்பெரும் மரத்தோணியை உருவாக்கிய நபி நூஹு (அலை) யின் தாயகமாகிய சோழ மண்டலத்தில், இறைவன் மனிதகுலத்தை அழிவிலிருந்து இரட்சித்த இடமாகிய தோனிபுரம் என்ற சீர்காழி பட்டினத்தை நான் காணவேண்டும்!"

இவ்வாறெல்லாம் இறைவனை தொழுதும் அழுதும் புலம்பும் தந்தையராகிய நபி தாவூத் (அலை) யின் மனத்துயர் கண்டு மைந்தர் சுலைமான் (அலை) அவர்கள், காற்றுக்குரிய வானவர் இஸ்ராபீலை அழைத்து, தனது தந்தை காண விரும்பும் இடங்களுக்கெல்லாம் அவரை அழைத்துச் செல்ல பணிக்கிறார்கள்.

குறிப்பு:

"உலகத்தில் தோன்றிய முதல் மதம் சைவம். சைவத்தின் முன்னவர் சிவபெருமான் இவர் நபி ஆதம் (அலை) யின் மைந்தரான காபீல் என்கின்ற காயீன் ஆவார்."

பார்க்க:- பக்கம் 224 சேது முதல் சிந்துவரை
(பூர்வ மனிதஇன ஆய்வு)
ஆசிரியர் - எம்.கே. ஈ. மௌலானா
பசுங்கதிர் பதிப்பகம்
43, முத்துமாரி செட்டித்தெரு, சென்னை - 1

வெளியீடு :- இஸ்லாமிய ஆய்வு மற்றும் கலாச்சார கூடம்
சென்னை - 600006.
(சீதக்காதி அறக்கட்டளையின் உட்கிளை)
விற்பனை தமிழ்மணி புத்தகப் பண்ணை
சென்னை - 600005.

"சிவமாகிய மூலப்பொருளை முதல்முதலாக உணர்ந்த சித்தர் சிவபெருமான்"

பார்க்க :- பக்கம் 101
தோற்றக்கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும்

ஆசிரியர் - டாக்டர் க.சு. உத்தமராயன்

வெளியீடு :- தமிழ்நாடு அரசுக்காக தமிழ்நாடு எழுதுகோள் அச்சுத்துறை இயக்குனரால் பதிப்பிக்கப்பட்டது.

குறிப்பு :-

"தமிழ்நாட்டிலுள்ள சீர்காழியிலேயே நூஹ் (அலை) தம் கப்பலை கட்டினர் என்றும். எனவே அதற்கு தோனிபுரம் என்ற பெயர் ஏற்பட்டதாகவும். தமிழ் இலக்கிய ஆய்வு என்ற நூலில் இராமசந்திர தீட்க்ஷிதர் எழுதியுள்ளார். நூஹ் (அலை) அவர்களுக்கு தோனியப்பர் என்ற பெயரும் உள்ளதாக கூறப்படுகிறது."

பார்க்க பக்கம் 429
இஸ்லாமிய கலைக் களஞ்சியம்
எம்.ஆர்.எம் அப்துர்ரஹீம்
வெளியீடு யுனிவர்சல் பப்லிஷர்ஸ்
அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை

இறந்த மனிதனின் பிரேதம் உலகின் எந்த இடத்தில் புதைக்கப்பட்டாலும், அந்த மனிதன் உண்டாவதற்காக எந்த மண்ணிலிருந்து வானவர்களால் மண் தோண்டி எடுக்கபட்டதோ அந்த இடத்திற்கு இறந்த மனிதனின் பிரேதம் சென்றடைந்துவிடும் - அல்ஹதீஸ்.

இந்த நபிமொழியின் அடிப்படையில் நபி தாவூத் (அலை) அவர்கள் தங்களுடைய உடலுக்கு மண் எடுக்கப்பட்ட இடம் சோழ மண்டலத்திலுள்ள முத்துப்பேட்டை என்று உள்ளொளி இல்ஹாமில் அறிந்து காற்றின் உதவியால் இன்றுள்ள முத்துப்பேட்டை நிலப்பகுதிக்கு வந்து தங்கி கொண்டார்கள்.

குறிப்பு :-

ஆதம் (அலை) அவர்கள் தான் அவர்கள் தோன்றி வாழ்ந்த பாரத பூமியில் சிவபெருமான் என்று கொண்டாடப்படுகிறார்கள். ஆதம் (அலை) மைந்தைகள் ஆபில், காபில் இருவரும் இராமேஸ்வரத்தில் அடங்கியுள்ளனர். மற்றொரு மைந்தரான நபி ஷீது (அலை) சேதுபாவா சத்திரத்தில் அருகிலிருந்த காட்டில் வசித்தார்கள்.

-அல்மர்ஹூம் சையத் ஹுசைன் தங்கள் - சக்கராப்பள்ளி

ஆதம் (அலை) அவர்களே சிவபெருமானாக கொண்டாடப்படுகிறார்கள் என்பது சூஃபிகளின் கருத்து.

அல்ஹாஜ் ஏ.ஜே.எஸ். அப்துல் ஹமீது டைஜி நாகூரி.

## பாரெங்கும் சுற்றிய பரமனின் தூதர்

*பாரில் தோன்றிய ஆதிதந்தை ஆதம்*
*பாதத்தை ஈழத்தில் பார்ப்பேனோ*
*நூரில் இலங்கிய ஆதம்ஹவ்வா - சக்தி*
*சிவமென்ற நுட்பத்தை அறிவேனா*
*சோர்வில்லாமல் நான் நின்றழுது காம*
*சுந்தரி பாதத்தை தொடுவேனா*
*சீர்காழி கடலோரம் நூஹ்நபி - தோனி*
*செலுத்திய இடம்கண்டு மகிழ்வேனா*
*ஆர்வமுடன் நின்று நபிதாவூத் - அந்த*
*ஆண்டவனை கேட்டு கனிகின்றார்*

*தந்தையின் வார்த்தையை கேட்கின்றார் - சுலைமான்*
*காற்றுக்கு கட்டளை தருகின்றார்*
*சுந்தர தாத்தின் கோட்டைக்குள்ளே - தாவூத்*
*சுற்றிசுற்றி காற்றில் ஆடுகின்றார்*
*கொந்தளித்த லாகூத் கடல்நடுவில் - தாவூத்*
*ஹூவில் முஹம்மதாய் மலர்கின்றார்*
*விந்தைகள் ஜபருத்தில் கண்டுவிட்டு - தாவூத்*
*விரைந்து வந்தார் முத்து பேட்டைக்குள்ளே*
*அந்தநாள் இவ்விடம் என்உடல்மண் - ஜிபுரீல்*
*அகன்றெடுத்தார் அதை நானறிவேன்*

*சொந்த மண்ணுக்கு என்உடலம் - அதை*
*கொண்டுவந்து நான் தந்துவிட்டேன்*
*எந்தையே ராலியா மர்லியா - நபுசில்*
*இன்ப நிலையை நீ தருகஎன்றார்*
*தொந்தம் விலகிய மனுநபுசில் - நானும்*
*தூய்மையாகவே கலந்து கொள்வேன்*
*அந்தமில்லாத காலமெல்லாம் - அவனில்*
*காமில் ஆகநான் அமைதி கொள்வேன்*
*உந்தன் முகப்பத்தை தாவூதே - இன்று*
*உவந்து கொண்டேனென்று இறை உரைத்தான்*

## தசரத இராமன் கண்ட தாவூத் நபி

கி.மு. 3000 க்கும் கி.மு. 700க்கும் இடைப்பட்ட காலமே உலக வரலாற்றில் இதிகாச காலமென்று கூறப்படுகிறது. அருந்தவ முனிவராக ஆண்டவனின் நபியாக தாவூத் (அலை) முத்துப்பேட்டை கானகத்தில் தங்கியிருந்தபோது காவியராமன் அவர்களை சந்திக்கிறான்.

இலங்கேஸ்வரனிடம் மனைவி சீதையைப் பரிகொடுத்துவிட்டு அவளை தேடி நடந்த பாதையில் இலக்குமணனோடும் அநுமனோடும் வரும் இராமபிரான் நெடும்பாதையில் பல முனிவர்களையும் ஞானிகளையும் சந்தித்ததாக வால்மீகி இராமாயணம் கூறுகிறது.

விஷ்ணுவின் மகனாகிய ஜாம்பவான் என்பவனை ஒரு ஓடையின் கரையில் சந்தித்து அருகாமையில் தங்கியிருந்த மாமுனி ஒருவரை நேரில் சென்று கண்டு ஆசீர்வாதம் பெற்றதாகவும் வால்மீகி ராமாயணத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன.

## கடலை தாண்டிய சீதா இராமன்

*தசரத ராமன் அனுமனுடன் - நபி*
*தாவூத் முனிவரின் குடிலுக்குள்ளே*
*விசனம் நிறைந்து வந்து நின்றான்-நபி*
*வேந்தனை மார்பில் தழுவுகின்றார்*

*மானிட பிறவியை எடுப்பவர்க்கு - இந்த*
*மாநிலம் சோதனை கூடமப்பா*
*ஏன்நீ ராமா வருந்துகிறாய் - உன்மயில்*
*இலங்கையில் நலமே இருக்கின்றாள்*

*ஆதியில் தோன்றிய இறையில்லம் - அது*
*அரேபிய பாலையில் மக்கப்பதி*
*மாதவர் இபுறாஹிம் மாநபியும் - அவர்*
*மைந்தரும் எழுப்பிய சொர்க்கப்பதி*

*நானும்என் மயிலாம் பத்தஷாயும் நெஞ்சில்*
*நாடியபடி மணம் முடிந்தபின்னர்*
*மானு ளாவிடும் மக்கப்பதி - அங்கு*
*பரிபடையோடு சென்று நின்றோம்*

*உயர்ந்து வான்தொடும் திருவீடு - கஅபா*
*உலகின் அதிசயம் அங்கிருந்து*
*பெயர்த்தொரு கல்லை எடுத்துவந்தேன் - அதை*
*பிரியமாய் உனக்கு தருகின்றேன்*

*கஅபா புனிதகல் இதனை நீ - சேது*
*கடலை தாண்டும் கரையில்நின்று*
*உவப்பாய் முத்தம் இட்டபடி - உன்*
*உத்தமியை மீட்க போர்தொடுப்பாய்*

*சீதா ராமன் கஅபாவின் - அந்த*
*சிதறிய கல்லை சிவலிங்கம்*
*ஈதென இராம ஈஸ்வரத்தில் - வைத்து*
*இறைவனை தொழுது துதிசெய்தான்*

*ஆதிமனிதராம் ஆதாமின் - மைந்தர்*
*ஆபில்காபிலை தரிசித்தான்*
*ஷீது நபி சேது கடற்கரையில் - நின்று*
*சீதாராமன் போர்தொடுத்தான்*

*போர்மேல் சென்றவன் வென்றுவந்தான் - அந்த*
*பொல்லா அரக்கனை கொன்றுவந்தான்*
*நீர்மேல் பறந்து வென்றுவந்தான் - இழந்த*
*சீதையை மீட்டு கொண்டுவந்தான்*

*மாதவர் தாவூத் மண்குடிலில் வந்து*
*மறுபடி பணிந்தான் இராமபிரான்*
*பூதலம்புகழ் முத்துப் பேட்டையிலே நடந்த*
*வரலாற்றை வால்மீகி கூறுகிறான்*

குறிப்பு: கஅபாவை தரிசிப்பவர்கள் அங்கிருந்து ஒரு கல்லை பெயர்த்தெடுத்து செல்வது முற்காலத்தில் வழக்கமாய் இருந்தது.

## முத்துப்பேட்டையில் நபி தாவூத் (அலை) உடன் மனைவி பத்தஷாயா

இன்று முத்துப்பேட்டையாக காட்சியளிக்கும் முல்லை நிலப்பரப்பில் பொன்னி நதியின் கிளைநதிகளில் ஒன்றின் கரையில் அமைந்த ஓலை குடிலில் ஒரு வசந்த கால காலை பொழுதில் உறங்கி கொண்டிருந்தார்கள் நபி தாவூத் (அலை) அவர்கள்.

ஆனால் பைத்துல் முகத்தஸ்ஸிலோ தனதுகணவரின் பிரிவால் தவிக்கும் தனது தாயார் பத்தஷாயாவின் விருப்பத்தை அறிந்து நபி சுலைமான் (அலை) அவர்கள் காற்றுக்கு கட்டளையிட்டு அவர்களையும் தமிழகத்தின் கடலோரப் பகுதியான காவிரிப்பூம்பட்டினத்துக்கு தெற்கே பொன்னிநதியின் கிளைநதியான முல்லை ஆற்றின் கரையில் தனிமைகுடிலில் வாழும் தனது தகப்பனார் நபி தாவூத் (அலை) அவர்களிடத்தில் கொண்டு சேர்க்க கட்டளையிட்டார்கள்.

## நபி முத்தில் கலந்த நாச்சியாரின் ஒளி

*பத்ம தாமரை பத்தஷாயாள் - நபியின்*
*பாத மலர்களில் படிகின்றாள்*
*நித்திரை கலைந்து ராஜரிஷி - தாவூத்*
*''நீஇங்கு வந்ததேன்'' வினவுகின்றார்*

*''சித்தம் கலங்குதே என்ன செய்வேன் - நெஞ்சின்*
*சித்திரமே உம்மை நான்பிரியேன்''*
*முத்தமிட்டாள் நபியின் உடல்முழுதும் - அவர்*
*முகத்தில் முகம்வைத்து கலங்குகின்றாள்*

*''எத்தனை பெண்கள் எனக்கிருந்தார் - அவர்கள்*
*என்ன ஆனார்களோ பொன்மலரே*
*அத்தனை பேரிலும் நீயொருத்தி - வந்து*
*அன்பின் புனல்போல பொங்குவதேன்?''*

*''மாதர்கள் உமக்கு பலநூறு பேர் - எந்தன்*
*மதிஉடல் மனமெங்கும் நிறைந்தவர் நீர்*
*பூதலம் வியக்கும் பேரரசே - இறைவன்*
*போ அவரிடம் - என்று சொல்லிவிட்டான்''*

*முத்துநபி தாவூத் பத்தஷாயை - நெஞ்சில்*
*முத்தமிட்டார் குடிலில் தங்கவைத்தார்*
*பத்து வயதான சிறுமியைப் போல் - அவள்*
*பரமனின் தூதர்க்குப் பணிபுரிந்தாள்*

*பத்து வருடங்கள் வாழ்ந்து நபி - காதல்*
*பத்தஷாயா மடியில் உயிர்துறந்தார்*
*முத்தர் மறைந்ததும் பத்தஷாயா - ஒளியாய்*
*முத்தில் அவருடன் கலந்துவிட்டாள்*

## தந்தையை தேடி வந்த தனயன்
## நபி சுலைமான் (அலை)

நபி தாவூத் (அலை) அவர்களுக்குப் பிறகு பேரோடும் புகழோடும் பைத்துல் முகத்தஸ் நகரில் நீண்ட காலம் நல்லாட்சி புரிந்து, உலகம் புகழும் மும்மத ஆலயத்தை வானளாவ எழுப்பி நபி சுலைமான் (அலை) அவர்கள் தமது அந்திமகாலத்தில் இந்தியாவுக்கு வந்து முத்துப்பேட்டை கானகத்தில் தாய் தந்தையரின் சமாதியை தரிசித்தார்கள்.

பின்னர் நபி சுலைமான் அவர்கள் அந்தமான் தீவுகளில் தங்கியிருந்து விருத்தாப்பிய நிலையில் அங்கேயே மரணமடைந்து அடங்கப்பெற்றதாக வரலாறு கூறுகிறது.

## Tomb at Muthupet is of David the Prophet
## (or)
## Saint Sheik Dhawood.

The Majar Shareef of Sheik Dhawood (oli) is located in Muthupettai in Thiruvarur District previously known as Tanjore District.

Seven hundred years back a farmer named Karuppiah Konnar was ploughing the land where the palace like Dhargah Shareef stands today. On seeing the splasing of fresh blood the farmer fainted and in his dream a saint appeared and said “I am Sheikh Dawood! My burriel ground is right here! Ask the Musalmans in the near by Nachikulam village to build a memorial in my name in this place.”

No other evidence is available about the Oliyulah except the above said incident. The miracles that happens to the people who flock at the Dhargah Shareef are countless. For all people the miracle happens in their dreams and in awakeness. They get salvation for their physical, mental and family problems everyday.

Since a muradh (need) of my Sheikh Mohamed Hussain Sahib Arifbillah had been fulfilled at this Dharga Shareef and since my younger brother Liyakath Ali gained spiritual knowledge here, and became a saintly person, I have a personal inclination towards the Dhargah Shareef.

For sometime I had been getting request from my friends and clans to write a book in the name of Sheik Dhawood Oliyullah. In all the other books in the name of the Oliyullah we can see descriptions of only his miracles and ballads in his name.

I had been wondering what to write.Some people living around the Durga say that there is a story by hearsay this Oliyullah is none other than the Prophet Dawood (peace). In some scriptures it has been said that Oliyullah belongs to Bani Isravel sect. Also in some other books it is found he belongs to the same period of Prophet Moses (peace).

Of course in my dreams I had been regularly getting messages that Oliyullah of this Dharga is none other than Prophet David.

The Prophet who introduced himself in the dreams of farmer Karuppiah Konar is giving messages in my dream that he is the Prophet David hailed in the Holy Bible and Holy Quran.

So I am not bewildered by the dreams I am getting. But the Psalms of the Holy Bible and the book History of the Prophets (Nabi Margal varalaru) by M.R.M. Abdul Rahim made me dumbstruck when I read the following verse:

"Those who ploughed the land
ploughed it over my back"

Another message from the Bible is that a river will run from east to west of the headside of the tomb of Prophet David and sea will be seen on the footside of his tomb. This Bible words has become a truth in the Mazar Shareef of Sheik Dawood Oliyllah.

This Oliyullah has another name Hikmath el Hukama which signifies him as a man specialised in medicine. The scriptures about Prophet David state that the great physician Lukman el Hakim had been a minister in the courts of Prophet David.

Again it states that Prophet David and Lukman el Hakem were close friends and they both were highly skilled physicians bound by their cult.

The reason for Prophet David moved from Jerusalem to India is he met the angel of death Israeil is his old ages. And the desire to visit the place of the first man Adam first preliminary appearance on the planet earth.

And the desire to see the shrines of Lord Siva who is actually Adam himself at the holy land of Hind. And the desire to see the place named Sirkazi where Prophet Noah built his ship.

And knowing that the land from which his body has been created is in Muthupet to justify the truth the body of man returns to the land from which it has been created, so his heart started to ebb with the desire to take his body to Muthupet.

His son Solomon the Prophet commanded the winds to carry his father to Ceylone and India. The information that Lord Rama with Hanuman visited him at the jungle which is now called Muthupet is available in Valmiki Ramanyana.

His beloved wife Badhasaya follows him to Muthupet. The son of Badhasaya is none other than Prophet Solomon. And Prophet Jesus is the descendant of Prophet Solomon and this information is available in the Holy Bible.

But it is an undeniable and newly found truth that Prophet Muhamed is the descendant of Prophet David and Solomon. Mother of Prophet Muhamed, Amina is a descendant of Sara, the daughter of Mary Magadalene, devotee and fiancee of Jesus Christ. This information boosts the importance of David in the history of the Prophets.

The fact that Prophet Muhamed is born of Abdullah, a descendant of Abraham's first son Ismail a three thousand years after Abraham is historical. The fore-fathers of Muhamed for a sixty of them by hierarchy are merchants.

But per the descendants of Abrahams second son Isacc, Moses, Jacob,Yusuf, David, Solomon and Jesus were born. They were all Prophets. In the revolt that happened 150 years after Jesus Christ's raise to heaven the people who left Jerusalem created the city of Medina otherwise called Yathrib.

Aamina the mother of Prophet Muhamed was born at Medina as a cause matrimonial relation between the Arabs and Nesturian and Sebellian sects who immigrated into the city with people from Jerusalem.

The Nubuvath that split into two by the two sons of Prophet Abraham, forerunner of Islam, were transfered through male descendants of Prophet Ismahel and female descendants of Prophet Isacc through Moses David and Solomon and Jesus, through his daughter Sarah and the Nubuvath bloomed to its fullness in the womb of Aamina as Prophet Muhamed, the perfect man and Seal of the Prophets.

This truth has been forecast in the Holy book of Zabur of Prophet David and in Quran.

The fact that Prophet David speaks to the birds and animals and had the capability to bend iron with bare hands. Also it is significant that he is a skilled physician with the benevolence and blessing of the Divine. Dawood lives as Kamil Oliyullah in the religion broughtforth by his descendent and grandson Prophet Muhamed.

Oliyullah fulfulls the needs of the devotees through their dreams. People with physical and mental ailments and other problems in the life get them sorted out in this Dhargah Shareef.

And the Prophet David here lives as a divine light that bestows people with spiritual knowledge and salvation by the name of Sheik Dawood Kamil Oliyullah.

**முத்துப்பேட்டை தர்கா வரலாறு :- முன்னர் வெளிவந்துள்ள நூல்கள்**

தர்காவின் வரலாற்றை ஒட்டி பல அறிஞர்களால் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன:-

கஷ்புல் கராமத் என்னும் காரணப் புதுமை
- ஆசிரியர் கா.யாஸீன் ஸாஹிப்

ராதிபத்துல் காதரிய்யா என்ற நூலில் கஸீதா முபாரக்

ஹலரத் ஷாஹ் ஷெய்கு தாவூது வலியுல்லாஹ் முத்துப்பேட்டை பைத்து

அரபி மனாகிபு
- அல்லாமத்துல் பாலில் அபூபக்கர் ஆலிம்

புகழ்மாலை
- காளை ஹசன் அலி புலவர்

ஷெய்கு தாவூது ஒலியுல்லா மவுலீது
- ஷெய்கு முகம்மது அபுபக்கர்

ஆனந்த ஷாஹித்யம்
- முனாஜாத்து மேலபாளையம் ஷாகுல் ஹமீது புலவர்

முத்துப்பேட்டை ஷெய்கு தாவூது அவுலியா கும்மிப்பாடல்
- முகைதீன் பக்கீர் புலவர்

முத்துப்பேட்டை ஷெய்கு தாவூது அவுலியா கதம்பகம்
-அருள்வாக்கி அப்துல் காதர்

ஷெய்கு தாவூது ஒலியுல்லா வரலாற்று கவிதை
- அருட்கவி அல்ஹாஜ் மு.முகம்மது தாஹாமதனி

தாவூதிய்யா மாலை
- கீழக்கரை ஆரிபுல்லா முகம்மது அப்துல் காதர் ஒலியுல்லாஹ்

தாவூது ஒலியுல்லா பேரில் பாட்டு
- திருப்பதி அப்பு

## பாதநிழல் தாரும்

*பரமன்புகழ் பைத்துல் முகத்தஸ்ஸாம் பள்ளியடிப்*
*படைகண்ட தல இமாமே*
*பறவைமுதல் மிருகாதி ஜீவர்களும் பேசும்*
*பாஷை அறிந்த தவமே*
*தரும தாயநீதி பதியாக பலஸ்தீன்*
*தரணியை ஆண்ட நபியே*
*ஜபூர் வேதமாம் புவிபுகழ் தம்பூரில்*
*சங்கீதம் தந்த ரிஷியே*
*குருதியாய் வெளியாகி ஜாம்பவன் ஓடையில்*
*குளிர் தருவதான ஒலியே*
*கொடியநோய் தீர்க்கும் தாருன் தவாவை*
*கொண்ட தருகாவின் பதியே*
*திரைநீக்கி என்கனவில் ‘‘ நான் நபிதாவூது*
*நீஅறிக’’ என்ற நிஜமே*
*தேடும் அடி யேன் சிரம்மீது திருப்பாத*
*நிழல்தரவும் வரவேண்டுமே*

*- எம்.ஏ. ஹைதர் அலீ யகீனுல்லாஷா*